★ பக்கங்கள் 8 விலை சதம் 40

# ஈழநாடு

The EELANADU

மலர்: 2 புரட்டாதி 25 ஜ ல்கஃ! 8 இதழ்: 242
யாழ்ப்பாணம் புதன்கிழமை 11-10-78

யாழ். நகரில்
போட்டோஸ்டாற் பிரதிகள்
வெளிநாட்டுக் கடதாசியில்
சாதாரண சைஸ்
ரூ. 1/- மட்டுமே
சுப்ப கனன்
கொப்பி சேவிஸ்
13, நவீனசந்தை(மேல்மாடி)
யாழ்ப்பாணம்.

### மக்னமாரா நாளை வருகிறார்

(கொழும்பு)

உலகவங்கித் தலைவர் திரு. றொபாட் மக்னமாரா நாளை இரவு கொழும்பு வருகின்றார்.

ஒருநாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு இங்குவரும் திரு. மக்னமாரா, மகாவலி அபிவிருத்திப் பகுதிகள், மஸ்கெலியா காணி அபிவிருத்திச்செய்கை ஆகியவற்றை ஹெலிகோப்டரில் சென்று பார்வையிடுவார்.

வெள்ளிக்கிழமை இரவு இங்கிருந்து திரும்புவார். (ம்)

# அரசுடன் இணைவது குறித்து கூட்டணி பேச்சு நடத்தவில்லை!

## ஜனாதிபதியுடனான சந்திப்பு: 'சிவா' விடுக்கும் அறிக்கை

(கொழும்பு)

**"தமிழர் விடுதலைக் கூட்டணியின் பாராளுமன்றப் பிரதிநிதிகள் சிலர், இம்மாதம் 5ந் திகதி ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவை சந்தித்தபோது, அரசாங்கத்துடன் தமிழர் விடுதலைக் கூட்டணி சேர்ந்துகொள்வது பற்றி எந்தவிதமான கருத்துப்பரிமாறலுமே நடைபெறவில்லை. இதனை நான் ஆணித்தரமாக இங்கு எடுத்துரைக்க விரும்புகிறேன்" என்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் திரு. எம். சிவசிதம்பரம் நேற்று விடுத்த அறிக்கையில் தெளிவுபடுத்தியுள்ளார்.**

தமிழர் விடுதலைக் கூட்டணியின் பாராளுமன்றக் குழுவின் பதில் தலைவரும், தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவருமான திரு.எம்.சிவசிதம்பரம் நேற்று விடுத்த அறிக்கையின் முழு விபரம் வருமாறு:

### சில நாளேடுகளில் ..

"கடந்த 7ந் திகதி வெளியான சில நாளேடுகளில் ("ஈழநாடு" அல்ல), தமிழர் விடுதலைக் கூட்டணி, அரசாங்கத்துடன் சேருமென்று வெளிவந்த செய்திகள் தொடர்பாகவே இந்த அறிக்கையை நான் விடுக்கிறேன்.

### அரசுடன் சேரும் பேச்சு நடக்கவில்லை

"கடந்த 5ந் திகதி, திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவை, தமிழர் விடுதலைக் கூட்டணியின் பாராளுமன்றப் பிரதிநிதிகள் சிலர் சந்தித்தபோது, அரசுடன் கூட்டணி சேருவது பற்றி எந்தவிதமான கருத்துப்பரிமாறலும் நடைபெறவில்லை. இதனை நான் ஆணித்தரமாக —தெளிவாக இங்கு கூறுகிறேன்.

### மாவட்ட அமைச்சர் பதவி

"மாவட்டஅமைச்சர் பதவிகளானவை, மாவட்ட நிர்வாக முறையை, அடிப்படையிலேயே மாற்றி அமைப்பதனால் இப்பிரச்னை எங்கள் கவனத்தை ஈர்த்திருந்தது. மாவட்ட அமைச்சர் பதவிகளின் தாக்கங்கள் குறித்து, எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கமும், கூட்டணியின் வேறு சில உறுப்பினர்களும் ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவுடன் ஏற்கனவே பேச்சுகள் நடத்தியிருந்தனர்.

### இம்மாத ஆரம்பத்தில்

"கடந்த நான்காம் திகதி தமிழர் விடுதலைக்கூட்டணியின் பாராளுமன்றக்குழுகூடி, இவ்விஷயங்கள்குறித்து நீண்ட நேரமாக ஆராய்ந்தது.

### குழு எடுத்த முடிவு

"குழுவின் பிரதிநிதித்துவம் ஒன்று, ஜனாதிபதியைச் சந்தித்தது. தமிழ் மாவட்டங்களுக்கு மாவட்ட அமைச்சர்கள் நியமிக்கப்படுவதை எதிர்க்கட்சித்தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் நாடு திரும்பும் வரை ஒத்திவைத்து இதன் விளைவுகளுக்கு மேலும் ஜனாதிபதியுடன் கலந்துரையாட வேண்டும் என்று தீர்மானித்தது இம்முடிவுக்கமைய, கூட்டணியின் பாராளுமன்றக்குழுவின் பிரதிநிதித்துவம் ஒன்று ஜதிபதியைச் சந்தித்து மேற்படி முடிவுபற்றி அறிவித்தது" என்று திரு. எம். சிவசிதம்பரம் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார். (ம)

## இன்று தீர்த்தோற்சவம்

(யாழ்ப்பாணம்)

நேற்றையதினம் நடைபெற்ற வண்ணை ஸ்ரீ வெங்கடேச வரதராஜப் பெருமான் கோவில் ஏதோற்சவ வைபவத்தில், நாட்டின் பலபாகங்களிலிருந்தும் பெருந்தொகையான பக்தர்கள் கலந்துகொண்டனர்.

நெரிசலைப்பயன்படுத்தி திருடர்கள் இரண்டு குழந்தை

(8ம் பக்கம் பார்க்க)

## "இனஐக்கியத்தை ஜே. ஆர். நெஞ்சார விரும்புகின்றார்"

### —அமைச்சர் தொண்டமான்

(சிலாபம்)

"ஜனாதிபதி திரு.ஜே.ஆர். ஜெயவர்த்தன, உண்மையிலேயே இன ஐக்கியத்தை விரும்புகிறார். நாட்டில் தேசிய ஒற்றுமை நிலவ வேண்டும் மக்களிடையே இன ஐக்கியம் ஏற்படவேண்டும் என்று அவர் நெஞ்சார விரும்புகிறார். இதனை நாம் தவ சரியாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்."

இவ்வாறு சிலாபத்துக்கு நேற்று முன்தினம் உத்தியோகபூர்வமாக விஜயஞ்செய்த கிராமியக் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் திரு. எஸ். தொண்டமான், சிலாபம் இரவுச் சந்தை மைதானத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

அமைச்சர் திரு. தொண்டமான் மேலும் பேசுகையில்; "பல அரசியல் தலைவர்கள் இன ஐக்கியம் —ஒற்றுமை பற்றி முன்னர் பல சந்தர்ப்பங்களில் பேசியிருக்கிறார்கள். அந்தந்தச் சந்தர்ப்பங்களுக்காக இப்படிப் பேசப்படுவதுண்டு. ஆனால், ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன, இன்று இன ஐக்கியம் பற்றி வலியுறுத்தவோ அல்லது தமிழ்த் தலைவர்களுக்கு அழைப்பு விடவோ தேவையில்லை. 140க்கும் அதிகமான ஸ்தானங்களைப் பாராளுமன்றத்திலும், விசேஷ அதி

[8-ம் பக்கம் பார்க்க]

பரதநாட்டிய அரங்கேற்றம்
செல்வி வாணி கந்தவனம்
திகதி: 13-10-78 வெள்ளி மாலை
இடம்: யாழ், வீரசிங்கம் மண்டபம்
தலைமை: செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி
பிரதம விருந்தினர்கள்:
பேராசிரியர் க. வித்தியானந்தன் தம்பதிகள்
கல்விப்பணிப்பாளர் திரு. தி. மாணிக்கவாசகர் தம்பதிகள்
0547

மகாராஜா முதலீட்டு (வரையறுக்கப்பட்ட) நிறுவனத்தின்
யாழ்ப்பாணக் கிளையின்
மங்களகரமான திறப்புவிழா
இடம்: 124, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
காலம்: 11-10-78 (இன்று) புதன்கிழமை
காலை 9-30 மணி.
விழாவில் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு
அன்புடன் அனைவரையும் அழைக்கின்றோம்.
மகாராஜா குழுக் கம்பனிகளின் முதலீட்டுத்துவ நிறுவனம்
MAHARAJA INVESTMENTS LIMITED, - JAFFNA BRANCH.



மகாராஜா (வரையறுக்கப்பட்ட) நிறுவனத்தின் நிர்வாக இயக்குனர் சபையினர். (0549)

## வரி விளம்பரம்


### விற்பனைக்கு

கல்விப் பொதுத் தராதர (சாதாரண) தரத்திற்கான புதிய பாடத்திட்டத்தின்படி எழுதப்பட்டு மாதிரி வினாக்களும் சேர்க்கப்பட்டுள்ளது .. ''நவீன விஞ்ஞானம்'' எல்லா புத்தகசாலைகளிலும் கிடைக்கும். 0514

நல்ல நிலையில் உள்ள BSA 3·5 மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. 'தனவாசா', D R O கந்தோர் ஒழுங்கை, தெல்லிப்பளை. 0541

SANYO — 2×1 றேடியோ விற்பனைக்குள்ளது இறக்குமதி செய்யப்பட்டது. F M M W S W 1, S W 2 கொண்டது. புத்தம்புதிது. க. சண்முகரத்தினம் J. P., 109, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். 0536

E L 1462 இலக்கம் போட் அங்கிலியா மோட்டார் வாகனம் விற்பனைக்குண்டு. நேரில் தொடர்பு கொள்ளவும். அக்குறேு தவாஸ், A. S. சங்கரப்பிள்ளை & பிறதர்ஸ் கட்டிடம், யாழ்ப்பாணம். 0540

### பயிற்சி

வெளிநாடுகளிலும், கப்பல்களிலும் வேலைகள் பெற நவீன வெளிநாட்டு முறையில் தொழிற்பயிற்சிகள். வெல்டிங் (Electric & Gas) இலெக்றிக் வயறிங், Radio Officers P M G Certificate, City & Guilds (Electrical) முதலியன. ஆங்கிலமும், St. John's Ambulance முதலுதவிப் பயிற்சியும் இலவசமாகக் கற்பிக்கப்படும். National Institutes 57, 59. பாங்சால் வீதி, யாழ்ப்பாணம். 0489

மூன்று மாத மின்னியல் டிப்ளோமா ஆரம்பமாகவுள்ளது. விபரங்கட்கு 16-10-78க்கு முன் தொடர்பு கொள்ளவும். அதிபர், இன்ஸ்ரியூட் ஒவ் என்ஜினியரிங் ரெக்னேலொஜி, 11/B, மொம்சாக் கட்டிடம், யாழ்ப்பாணம். 0543

சுன்னாகம்

பல. நோ. கூ. சங்கம்

(வரையறுள்ளது)

சுன்னாகம்.

### அறிவித்தல்

சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் பின்வரும் பொருட்கள் கேள்விப் பத்திரம் மூலம் விற்பனைக்கிருக்கின்றன.

1. பழுதடைந்த பேரீச்சம் பழம்.
2. மாசித்தூள்.
3. வெற்றுச் சோடாப் போத்தல்.
4. கழிக்கப்பட்ட வெற்றுப் பரல்கள். (45 கலன் கொள்ளக்கூடியது.)
5. கழிவு மா.
6. சீமெந்து வெற்றுப் பைக்கற்றுகள்.

கேள்விப்பத்திரங்களை காரியாலய வேலை நாட்களில் ரூபா 100/- மீளளிப்பு வைப்புப் பணமாகச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விப்பத்திரங்கள் யாவும் 20-10-78 வெள்ளியன்று நண்பகல் 12-00 மணி வரையும் ஏற்றுக்கொள்ளப்படும்.

பொது முகாமையாளர்.

9-10-1978. 0545


# ''புதிய சமுதாய அமைப்பை விளையாட்டுப் போட்டி ஏற்படுத்தும்''

-- மானிப்பாய் எம். பி.

(யாழ்ப்பாணம்)

''மனித சமுதாயத்தின் நலனைப் பேணுவதற்கு மிகவும் இன்றியமையாதது விளையாட்டுப் போட்டிபோன்ற விழாக்களாகும். இதுபோன்ற விழாக்களின் மூலம் சமுதாயத்தின் பலதிறப்பட்ட மக்கள் ஒருவரை ஒருவர் சந்திக்கவும், உறவாடவும், குறைநிறைகளைக் கண்டறியவும் வாய்ப்பேற்படுகின்றது.'' இவ்வாறு மானிப்பாய் எம். பி. திரு. வி. தர்மலிங்கம், ஏழாலை தெற்கு ஸ்ரீமுருகன் விளையாட்டுக் கழகத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்ட விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றினார்.

தொடர்ந்து அவர் மேலும் பேசும்போது, விளையாட்டுப் போட்டிகள் சாதாரணமான தொன்றல்ல. அது மக்களுக்கு உற்சாகத்தை, ஒற்றுமையை, விடாமுயற்சியை'' நல்ல உணர்வை; ஒருமைப்பட்டை ஏற்படுத்தி அதன்மூலம் சிறந்த ஒரு சமுதாய அமைப்பை ஏற்படுத்தி விடுகின்றது'' என்றார்.

ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலய அதிபர் திரு அ. சிவபாதம் கலந்துகொண்டு உரையாற்றுகையில் ''பின்தங்கிய அமைப்பினைக் கொண்ட சமூகத்திற்கு விளையாட்டுப் போட்டி போன்ற விழாக்களினால் எத்தனையோ முன்னேற்றங்கள் தென்படுகின்றன. இப்போட்டிகளின் மூலம் இளைஞர்கள், சிறுவர்கள் தம்வாழ்க்கைக்குகந்தபல தரப்பட்ட ஆயத்தங்களைச் செய்து முன்னேறுவதற்கு வாய்ப்பாக உள்ளது'' எனறார்.

ஸ்ரீமுருகன் கிராமமுன்னேற்றச் சங்கத் தலைவர் திரு. வே. பாலசிங்கம் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் சுன்னாகம் பொலிஸ் நிலைய அதிபர் பி. சுகுணேந்திரன் கலந்துகொண்டு பரிசுகள் வழங்கினார். திரு மா. நடராசா நன்றி தெரிவித்துப் பேசினார். (ஈ)

## இன்றைய இராசிப்பலன்

புரட்டாதி மாதம் 25-ந் திகதி புதன்கிழமை

(11-10-78)

**மேடம்:-** நல்லதைச் செய்வீர்கள், நலன் பெருகும். சமூகத்தில் மதிப்பு உயரும், அரசியல்வாதிகள் அதிர்ஷ்ட தேவதைகளை அணைத்துக் கொள்வர்.

**இடபம்:-** குடும்பத்தில் சிறுபிணி தலைதூக்கும், இதன் மூலம் வைத்தியச் செலவுக்கும் இடமேற்படும், கடமையில் கவனம் செலுத்தவும், இறைநம்பிக்கை நன்று.

**மிதுனம்:-** மனதில் அமைதி குன்றும், எதிரிகள் எக்காளமிடுவர், மறைந்த நினைவுகள் மீண்டும் தலைதூக்கும், அமைதியே நன்று, அறிவுக்கு நலம்.

**கடகம்:-** இல்லத்தில் இனிமை வளரும், உறவினர்கள் கூடுவர், களஸ்திரவழியின் மூலம் கனதனம் சேரக்கூடும்.

**சிங்கம்:-** கடன் தொல்லைகள் கவலையைத் தரும், உறவினர்களுடன் பிணக்குகள் தோன்றும், புதிய முதலீடுகளைத் தவிர்ப்பதுடன் உஷாராக இருக்கவும்.

**கன்னி:-** மனம்போல் வாழ்வு இன்று மலரும், தொழில் புரியும் இடத்தில் ஒத்துழைப்புக் கிடைக்கும், சிலருக்குப் பதவி உயர்வும் கிடைக்கலாம், முயற்சியால் முன்னேற்றமுண்டு.

**துலாம்:-** கடமையில் ஆர்வம் பிறக்கும், சிலருக்கு இடமாற்றத்திற்கு இடமுண்டு சிலர் வாழ்க்கையில் கடல் கடந்த பிரயாணம் ஒன்றும் மேற்கொள்ளப்படலாம்.

**விருச்சிகம்:-** பொதுத் துறையில் நாட்டம் செல்லும், இளமை நினைவுகள் நிழலாட்டம் போடும், காதல் கணை தாக்கும், பெரியோர் ஆதரவும் கிடைக்கும்.

**தனுசு:-** நடையில் தயக்கம் ஏற்படும், எவரிடத்திலும் அதிக நம்பிக்கை வைக்க வேண்டாம், கடல் பிரயாணத்தைத் தவிர்த்துக் கொள்ளவும்.

**மகரம்:-** தொழில் சம்பந்தமான கவலை அதிகரிக்கலாம், திடீர் பிரயாணத்திற்கும் இடமுண்டு, அதிக சிந்தனைக்கிடமளியாது அமைதியுடன் இருக்கவும்.

**கும்பம்:-** காதல் விவகாரங்கள் தலைதூக்கும், தனச் சிறப்புக்கும் இடமேற்படும், குடும்பத்தில் மகிழ்ச்சிக்கிடமுண்டு.

**மீனம்:-** சுறுசுறுப்புக் குன்றும், குடும்பத்தில் சிறு பூசல்கள் தோன்றி மறையும், கொள்கையில் கோணலுடன் கோபமும் அதிகரிக்கும், அமைதி நன்று.

சோதிடக்கலாநிதி

திருமலை க. வேலுப்பிள்ளை

# ''நோய் நொடியின்றி வாழ விளையாட்டுகள் அவசியம்''

-- வைத்திய அதிகாரி

(யாழ்ப்பாணம்)

''மக்கள் நோய் நொடியின்றி வாழ்வதற்கு விளையாட்டுக்களில் ஈடுபடவேண்டும் அரசாங்கம் கூடவிளையாட்டுத் துறைக்கு பல்வேறு வகையான உதவிகளைச்செய்து வருகின்றது இவ் விளையாட்டுப் போட்டிகள்மூலம் ஐக்கியத்தை ஏற்படுத்த முடியும்'' என்று காங்கேசன் துறை சுகாதார வைத்திய அதிகாரி திரு. இ. தெய்வேந்திரன், கீரிமலை கூவில் சிவானந்தா சனசமூக நிலையத்தின் வருடாந்த விளையாட்டுப் போட்டியும் பத்தொன்பதாவது ஆண்டு விழாவும் நிலையத் தலைவர் திரு. க. வைரவப்பிள்ளை தலைமையில் நடைபெற்றபோது அதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரை நிகழ்த்துகையில் குறிப்பிட்டார்.

திரு. தெய்வேந்திரன் தொடர்ந்து பேசுகையில் சனசமூக நிலையங்கள், விளையாட்டுப் போட்டிபோன்ற பல்வேறு நிகழ்ச்சிகளில் ஈடுபடுவது போன்று அந்தந்தப் பகுதிகளுக்குத் தேவையான சுகாதார வசதிகளையும் ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும். இப்படிச் செய்வதன் மூலம் கிராமப் பகுதிகளின் சுகாதாரம் பேணப்படுகிறது. கிராமப் பகுதியில் வாழும் இளைஞர்கள் தமது ஓய்வு நேரங்களில் சுகாதாரப் பயிற்சிவகுப்புக்களில் சுகாதார சம்பந்தமான விடயங்களைப் பயின்று அதனை அந்தப் பகுதி மக்களுக்கு எடுத்துக் கூறவேண்டும் என்றார்.

திருவாளர்கள் க. வைத்தீஸ்வரன், கே. சிவரத்தினம், பண்டிதர் யோ. ஆசிநாதர், மு. செல்வராசா ஆகியோரும் உரையாற்றினார்கள். இவ் விளையாட்டுப் போட்டியில் முறையே காந்தி இல்லம், பாரதி இல்லம், வள்ளுவர் இல்லம் வெற்றி பெற்றன.

கலைநிகழ்ச்சிகளும் நடைபெற்றன. செயலாளர் திரு க. குழந்தைவேலு நன்றி தெரிவித்துப் பேசினார். (ஈ)

## காந்திக் கிராமத்தில் சேவாசங்கத்தினர்

(மட்டக்களப்பு)

பட்டிருப்புத் தொகுதியில் உள்ள குடியேற்றப் பிரிவாகிய காந்திக் கிராமத்திற்கு அகில இலங்கைக் காந்திசேவா சங்கத்தின் மட்டக்களப்புக் கிளையினர் நேரில் சென்று பார்வையிட்டு இக் கிராமத்தின் பொருளாதாரம், கல்வி, சமூகக் குறைபாடுகள் பற்றியும் அவற்றை நீக்குவதற்கான ஆலோசனைகளையும் கொண்ட மகஜரொன்றை, செயலாளர் திரு. க. பாரதிதாசன் தலைமைச் சங்கத்திற்கும் உயர் அரசாங்க அதிகாரிகளுக்கும் அனுப்பியுள்ளார். [அ]

## கன்பொல்லை வளர்ச்சியில் எம். பி. தீவிரம்

(நெல்லியடி)

கல்வி, பொருளாதாரம் முதலானதுறைகளில் பின்தங்கியுள்ள கன்பொல்லைக் கிராமத்தை மிகவும் சிறப்பான முறையில் அபிவிருத்தி செய்வதே தமது கடமையாகக் கருதுவதாக உடுப்பிட்டி எம். பி. திரு. த. இராசலிங்கம் தெரிவித்தார்.

அரசாங்கத்தினால் மாதிரிக் கிராமமாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள இப்பகுதியில் அபிவிருத்தி வேலைகள் மிகவிரைவில் ஆரம்பமாகவுள்ளன. இதற்குப் பொது மக்களின் ஆதரவு கோரி கன்பொல்லைக் கிராமத்தில் ஒரு ஆலோசனைக் கூட்டம் த இராசலிங்கம் எம். பி. தலைமையில் நடைபெற்றது. அப்பொழுது மேற்கண்ட கருத்துக்களை எம். பி. தெரிவித்தார்

அரசாங்க அதிகாரிகளுக்கு உதவும்வகையில் குழு ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது. (அ)

## மணிவாசகர் சபை சமயப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

காரைநகர் மணிவாசகர் சபையால் காரைநகர்ப் பாடசாலை மாணவர்களிடையே வருடாந்தம் நடாத்தப்பெற்று வருகின்ற சைவசமயபாடப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் பாடசாலை அதிபர்கள் மூலமாகக் கோரப்பட்டுள்ளன. இவ்வாண்டு இப்பரீட்சையில் இரண்டாம் வகுப்புத் தொடக்கம் பத்தாம் வகுப்பு வரையுள்ள மாணவர்கள் தோற்றுவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## பெ. ஆ. சங்கம் கோரிக்கை

(புலோலி)

பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலயத்திற்குப் புதிய இருமாடிக் கட்டிடம் ஒன்று அமைக்கப் பணம் ஒதுக்கித் தரும்படி பாடசாலையின் பெற்றோர்-ஆசிரியர் சங்கம் பருத்தித்துறை எம். பி திரு. க. துரைரத்தினத்தை வேண்டியுள்ளது (அ)

## றிமாண்ட்

[மாவிட்டபுரம்]

சங்கானையில் பெருந்தொகையான திருட்டுச் சைக்கிள்களுடன் கைதான சந்தேகநபர் குறித்து விசாரணை முடியவில்லையென்று பொலிஸ்தரப்பில் தெரிவிக்கப்பட்டதையடுத்து, சந்தேகநபர் இம்மாதம் 18ந் தேதி வரை றிமாண்டில் வைக்கப்பட்டார்

சங்கானைப் பொலிஸ்பகுதியில், சுமார் 200க்கு மேற்பட்ட திருட்டுச் சைக்கிள்களை மீட்ட சங்கானைப் பொலிசார் இது தொடர்பாகச் சந்தேகத்தின்பேரில் சண்டிலிப்பாயைச் சேர்ந்த சிவபாதம் என்பவரைக் கைதுசெய்து, மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர்செய்த சமயம் அவர் றிமாண்டில்வைக்கப்பட்டார்.

இவர் மீண்டும் மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்டபோது, அவரது சார்பில் ஆஜரான சட்டத்தரணி ஆர். ஜே. செல்வரத்தினம், ''இச்சந்தேகநபர் மூலந்தான் பொலிசார், சைக்கிள்களை மட்டுமல்ல வேறு பொலிஸ் பகுதிகளைச் சேர்ந்த திருட்டுச் சம்பவங்களைக்கூடக் கண்டுபிடித்துள்ளனர் இவர் நினைத்திருந்தால் இவற்றைக் கண்டுபிடிக்கப் பொலிசாருக்கு உதவாமல்விட்டிருக்கலாம். ஆனால் அவர் துணிந்து பொலிசாருக்கு உதவியதன் மூலம் பல திருட்டுக்கள் துப்புத்துலங்கியுள்ளதால் இவர் மீது பொலிசார் கருணைகாட்டி, அவரைப் பிணையில்விடச் சம்மதத்தைத் தெரிவிக்கவேண்டும்'' என்றார்

சங்கானைப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜனுப்ரி ஜே. மீஸ்கின், இவரைப் பிணையில் விடத் தமக்கு ஆட்சேபமில்லையென்றும், விசாரணை இன்னும் முடிவுபெறாமையால், அடுத்த தவணையில் பிணை வழங்கத் தாம் சம்மதிப்பதாகவும் கூறினார்.

இதையடுத்து நீதிபதி திரு. எஸ். ஆனந்தக்குமாரசாமி சந்தேகநபரை இம்மாதம் 18ந் திகதி வரை றிமாண்டில் வைக்கும்படி உத்தரவிட்டார்.

## முதலிடம்

(புலோலி)

யாழ். மாவட்டத்தில் நடைபெற்ற வருடாந்த சாரணர் விழாப்போட்டிகளின் பலநிகழ்ச்சிகளில் வல்வெட்டித்துறை சிதம்பரா கல்லூரி முதலிடத்தைப் பெற்று வெற்றிக்கிண்ணத்தைப் பெற்றுக்கொண்டது.

யாழ். பழைய பூங்காவில் சென்ற மாதம் 29-ம் திகதி தொடக்கம் இம்மாதம் 1ம் திகதி நடைபெற்ற வருடாந்த சாரணர் விழாவின் அரங்கக்காட்சி நிலைக்காட்சி பாசறைத்தீ சமூகசேவை என்ற நான்கு போட்டிகளிலும் முதலாவது இடத்தையும் பாசறைப்பரிசோதனை, பதிவேடுகள் ஆகிய இரண்டிலும் இரண்டாம் இடத்தையும் இக்கல்லூரி பெற்றுக்கொண்டது. [அ]


உ

## யாழ்நகரில் உங்கள் அச்சுவேலைகள்

- பாடப்புத்தகங்கள், பத்திரிகைகள், சஞ்சிகைகள்
- வியாபாரப் பில் புத்தகங்கள், பேரேடுகள், லெட்டர்ஹெட்டுகள், வவுச்சர்கள்,
- கலண்டர்கள், கலர் லேபல்கள், பாக்குகள்,
- துண்டுப்பிரசுரங்கள், மிகப்பெரிய சுவரொட்டி விளம்பரங்கள்,
- மங்கள நாள் அழைப்பிதழ்கள், வாழ்த்துமடல்கள்

எதுவானாலும் குறைந்த விலையில், சிறந்த முறையில் குறித்தகாலத் தவணைக்குள் செய்துகொள்ள எம்மிடம் ஒப்படையுங்கள்.

### ஸ்ரீ லங்கா அச்சகம்

(ஸ்ரீ லங்கா புத்தகசாலைக்குப் பின்புறம்)

234A, கே. கே. எஸ். றோட்டு, யாழ்ப்பாணம்.

0550

ஈழநாடு
The Eelanaadu

# இறக்குமதியும் உள்ளூர் உற்பத்தியும்

புடவை இறக்குமதியை தற்காலிமாக இடைநிறுத்தி தேங்கிக்கிடக்கும் உள்ளூர் உற்பத்திப் புடவைகளை விற்பனைசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கும்படி புடவைக் கூட்டுத்தாபனத் தலைவர் திரு. ஒஸ்கார் டி லிவேரா அரசாங்கத்தை கேட்கவிருக்கிறார் என்று ஒரு செய்தி வெளியாகியுள்ளது.

துல்கிரிய, வியாங்கொடை, பூகொடை, வெலோணு ஆகிய புடவை உற்பத்தி ஆலைகளின்பண்டசாலைகளில் சுமார் 10 கோடி ரூபா பெறுமதியான புடவைகள் தேங்கிக்கிடக்கின்றனவாம்.

இந்தப் புடவைகளை உடனடியாக விற்பனை செய்யாவிடில் கூட்டுத்தாபனத்துக்கு மிகப்பெரிய நட்டம ஏற்பட்டுவிடும் என்று கருதப்படுகின்றது.

புடவை மாத்திரமல்ல உள்ளூரில் உறபத்தியாகும் பொருட்களுக்கு தட்டுபபாடு ஏற்படும் பட்சத்தில் மாத்திரமே ஓரளவுக்கு வெளிநாட்டுப் பொருட்களை இறக்குமதிசெய்ய வேண்டும் என்ற கருத்தை பலதடவைகளிலும் நாம் இங்கு வற்புறுத்தி வந்திருக்கின்றோம்.

உள்நாட்டில் உற்பத்தியாகக்கூடிய பொருட்களை வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்வதானது, உள்ளூர் உற்பத்திக்கு அனுகூலமளிக்கமுடியாது இதனால் நேரடியாகப் பாதிக்கப்படுகிறவர்கள் இந்த உற்பத்திகளில் ஈடுபட்டிருக்கும் ஸ்தாபனங்கள் மாத்திரமே என்று கருதிவிடமுடியாது. இந்தத் தொழில்களில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்களும், அவர்களின் குடும்பங்களுமே பெரிதும் பாதிப்புக்குள்ளாகிறார்கள்.

வெளிநாட்டுப் புடவைகள் இறக்குமதிசெய்யப்படுவதனால் தனிப்பட்ட முறையில் இத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களும், சிறுதொழில்நிலைய சொந்தக்காரர்களும் அவர்களின் குடும்பங்களும் பெரும் பாதிப்புக்குள்ளாகியிருக்கிறார்கள் என்பதைச் சொல்லித் தெரியவேண்டியதில்லை.

சில காலத்துக்கு முன் மிளகாய், வெங்காயம், உருளைக்கிழங்கு போன்ற விவசாயப் பொருள் உற்பத்தியில் விவசாயிகள் பெரும் ஆர்வத்துடன் ஈடுபட்டனர். ஆனால் அந்த உற்சாகத்தை இன்று அவர்களிடம் காணமுடியவில்லை.

இவர்களின் உற்பத்தி உள்ளூர் தேவையைப் பூர்த்திசெய்யப் போதவில்லையென்று அரசு கருதினால் அவர்களுக்கு மேலும் ஊக்கம் கொடுத்து உற்பத்தியைப் பெருக்கியிருக்கலாம். அதேசமயம் உற்பத்தியாகும் பொருட்கள் ஒரே இடத்தில் தேங்கிவிடாமலும், பதுக்கப்படாமலுமிருக்கவும் நாடுபூராவும் சமஅளவில் பகிர்ந்தளிக்கவும் சிறப்பான முறைகளைக் கையாள முயற்சி எடுத்திருக்கவேண்டும். அதைவிடுத்து எடுத்த எடுப்பிலேயே இப்பொருட்களை வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்து தட்டுப்பாட்டை நீக்கவும் விலையேற்றத்தைத் தடுக்கவும் முயல்வதானது நீண்ட பலனைத் தரமுடியாது.

உற்பத்தியாளர்களதும், தொழிலாளர்களதும் அதிருப்தியை அதிகப்படுத்திக்கொண்டதாகவே இது முடியும்.

# ஆதிபராசக்தி நினையல்லால் ஆதாரம் ஆரெமக்கு அவனியிலே

-- சோம ஸ்ரீபவன் --

நவசக்திகள், நவஇரவுகள், நவரசங்கள், நவரத்தினங்கள் என்னும் சொற்குவையல்கள் சிறப்பு இயல்பை உணர்த்துவன. நவயுகம், நவஇந்தியா, நவநாகரிகம் என்பவற்றில் வரும் நவ என்னும் அடைமொழிச்சொல் புதுமையை உணர்த்தும் தன்மையது. ஆண்டுதோறும் புரட்டாதி மாதத்தில் வரும் பூர்வபக்கநவமியை மஹாநவமியென அழைப்பது எம் முன்னவர்களின் மரபு. இது இன்றைக்கும் தொடர்ந்து கடைப்பிடிக்கப்பட்டு வரப்படுகின்றது.

### நவசக்திகள்

முருகன் திருஅவதாரத்தில் முக்கண்ணர் நெற்றிக்கண்ணிலிருந்து வெளிக்கிளம்பிய ஆறு திருப்பொறிகளின் தாக்கத்தை சகிக்கமுடியாத (உமை) பார்வதிதேவி அம்மையார் திருக்கைலையங்கிரியிலே நின்றும் ஓட்டம்பிடித்தார். இமயமலையில் இறங்கி இருந்து ஒருவாறு தப்பித்தார். அது பொழுதில் அவருடைய கால்களில் இருந்த நூபுரங்களிலிருந்து முத்துப் பரல்கள் பறந்தன. அந்தப் பரல்களிலிருந்து நவசக்திகளான துர்க்கை, பத்திரை, சரஸ்வதி, பிராமி, மாகேஸ்வரி, கௌமாரி, வைஸ்ணவி, வாராகி, சாமுண்டி என்னும் நவநிதியங்களும் தோன்றின. இதனால் அம்பிகையின் பேரருள் பொதிந்த சக்திகள்தோன்றின.

புரட்டாதிமாதத்தில் முதல் மூன்று இரவிலும் துர்க்கை அம்மைக்கும் அடுத்து மஹாலக்ஷ்மிக்கும், இறுதி மூன்று தினங்களும் மஹாநவமிவரைக் சரஸ்வதி அம்மைக்கும் விசேட வழிபாடு செய்யப்படுகின்றன.

அகிலாண்டகோடி ஈன்ற அன்னை பராசக்தியின் உருவங்களே இவை எனச் சொன்னால் அது மிகையாகாது.

### விஜயதசமியில்

இறுதிநாள் விஜயதசமியில் மிகிஷன்வதத்தினமான மான்அம்புவிழா இடம்பெற்று வீரம், செல்வம், கல்வி என்னும் முப்பெரும் வரப்பிரசாதங்கள் நிலைநிறுத்தப்படுகின்றன. வடஇந்தியாவில தசரா என இந்த நவஇரவு விழாக் கொண்டாடப்படுகின்றது.

தனம்தரும் கல்விதரும்
ஒருநாளும் தளர்வு
அறியாஉளம் தரும்
தெய்வ வடிவுந்தரும்
நெஞ்சில் வஞ்சம்
இல்லா இனந்தரும்
நல்லதை எல்லாம்தரும்
அன்பர் என்பவர்க்கே
கனம்தரும் பூங்குழலாள்
அபிராமிதன் கடைக்கணே

என்று அபிராமி அந்தாதி கூறுகின்றது.

பராசக்தி என்னும் அபிராமியை வேண்டி வழிபாடு செய்தால் எமக்கு எல்லாவிதமான நன்மைகளும் கிடைக்கும். ஆகவே நவராத்திரி விழாவில் நவயுகம் நிலைநிறுத்தப்பட நவசக்திகளின் வழிபாட்டை நாடெங்கிலும் நடாத்தவேண்டும். வரப்பிரசாதங்களைவிரும்பியபடி பெற்று மக்கள் ஈடேற இவ்விழாக்கள் பெரிதும்உதவக் கூடியன. கல்வி, கலை என்னும் அம்சங்களைக் கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை,

"நாடிப்புலவர்கள்
உழுவார் கரமும்
நயவுரைகள் தேடிக்
கொளிக்கும் கலைவாணர்
நாவும்
அடிக்களிக்கும் மயிலே
உன்பாதம் அடைக்கலமே"

என கலைமகள் வாழ்த்தில் எடுத்துச் சொல்லுகின்றார்.

### கவி பாரதி

அமரகவி பாரதியார்,

வெள்ளைத்தா மரைப்பூவில்
இருப்பாள்! வீணை
செய்யும் ஒலியில்
இருப்பாள்! கொள்ளை
இன்பம் குலவு கவிதை
கூறு பாவலர்
உள்ளத்திருப்பாள்!
உள்ளதாம் பொருள்
தேடிஉணர்ந்தே ஓரம்
வேதத்தின் உள்நின்
றொளிர்வாள் கள்ளம் அற்ற
முனிவர்கள் கூறும்
கருணை வாசகத்துட்
பொருளாவாள்"

என கலாதேவியைப் பெரிதும் போற்றியுள்ளார்.

### ஆதாரம் ஆரெமக்கு?

மாதா பராசக்தி! வையம்
எல்லாம் நீ! நிறைந்தாய்,
ஆதாரம் நின்னைஅல்லால்
ஆரெமக்குப் பாரினிலே

எனப் பராசக்தியைப் போற்றி வழிபாடுசெய்கின்றார். "செத்தேன் சிவனே எனச் சும்மா இருந்து வருகிறேன்" என எமது மூதாதையர்கள் சொல்வது வழக்கம். இதிலிருந்து சிவம் சும்மா இருப்பது எனப் பொருள் படுகின்றது.

சக்திதான் அனைத்துலகத்தையும் அண்டசராசரங்களையும் இயக்கக்கூடியது. "எங்கெங்கு பார்த்தாலும் சக்தியடா! எங்கு அவள்வண்ணக் காட்சியடா" என்பதும் உண்மை நிலையை எடுத்துக் காட்டும் மேற்சோள்கள்.

ஆதலால் எல்லாம் வல்ல

(7-ம் பக்கம் பார்க்க)

## வாக்கியத்தைக் காட்டுவளே வாணி

அம்பலத்தை ஆட்டத்தை ஆகமத்தை அற்புதத்தை
நம்பலத்தை நாட்டத்தை நல்லுளத்தை—அம்புவிக்கண்
ஆக்கத்தை நோக்கத்தை ஆங்கருத்தை ஐக்கியத்தை
வாக்கியத்தைக் காட்டுவளே வாணி.

வானத்தை வையகத்தை வண்ணத்தை வாகடத்தை
ஞானத்தை நாடகத்தை நற்கருத்தை—மோனத்தை
கானத்தைக் காலத்தைக் காட்டும் கவிநயத்தை
தானத்தைச் சாற்றுவளென் தாய்.

தாயே சரஸ்வதியே சர்வகலா சாரதையே
தூயோர் தொழும்முதலே சூக்குமமே—வாயாரப்
போற்றும் பொருள்சிறக்கப் பொற்பார் புகழ்ப்பா
ஏற்றம் தருவாய் இனிது.

--அ யாலையூர் வே. ஐயாத்துரை

# எழுவைதீவில் கலியுகக் கந்தன்

-- மனோகரன் ம. மயில்வாகனம் --

எழுவைதீவு அற்புதம் பற்றி முதன் முதலில் நான் கற்பிக்கும் இந்துக்கல்லூரி மாணவர்கள் சிலரிடமிருந்து கேள்விப்பட்டேன். பின்னர் ஆசிரியர்கள் சிலரும் இதுபற்றி உரைத்தார்கள். சிலருக்கு இது உண்மையாக இருக்கலாம் என்ற நம்பிக்கை இருந்தது. பலருக்கு இத்தகைய 'அற்புதம்' இந்தவிஞ்ஞான யுகமான இருபதாம் நூற்றாண்டில் நிகழமுடியாது. என்ற கருத்துத் தென்பட்டது. இந்த யுகம் கலியுகம் என்பதும் அந்த அந்த யுகத்துக்குரிய கடவுள் கலியுகவரதனாகிய கந்தப் பெருமான் என்பதும் பின்னவர்க்குத் தோன்றாதுவிட்டது.

எனக்கும், இப்படி ஓர் அற்புதம் நிகழ்வது சாத்தியமாகாது என்ற உணர்வு இல்லாவிட்டாலும் இதன் உண்மை நேரில் அறிந்து அனுபவித்து உணர வேண்டுமென்ற ஆர்வம் ஏற்பட்டது.

ஞாயிற்றுக்கிழமை காலை அன்று எங்கும் வெளியே செல்வதில்லை. முதல் நாளும் பள்ளிக்கூடம்— என்று தீர்மானித்திருந்தேன். இதற்கிடையில் 'ஈழநாடு' வந்தது. பத்திரிகையைப் பிரித்துப்பார்த்தேன். எனது பழைய நண்பர் எழுதிய எழுவைதீவுக் கட்டுரை கண்ணிற்பட்டது. 'விறுவிறு' என்று ஒரேமூச்சில் அதை வாசித்தேன். பின்னர், இயந்திரமானேன். ஏறத்தாழ முக்கால் மணித்தியாலத்தில் நானும் எனது பிள்ளைகளில் இருவரும் ஊர்காவற்றுறைக் கடற்கரையில் ஓர் இயந்திரப் படகில் உட்கார்ந்துகொண்டிருந்தோம்.

எழுவைதீவில் முதன் முதலாக முருகனுடைய அழைப்பில் காலடி எடுத்துவைத்த நாம், இன்னும் பல பக்தர்களுடன் சேர்ந்து பனங்கூடல்களுக்கூடாக விரைந்து நடந்து சென்றோம். கோவில் பெரிய பழம் கோயிலாகத்தானிருக்கும் என்றே எண்ணினோம். ஆனால், அது நிமிர்ந்த தோற்றத்துடன் புதுப்பொலிவுடைய எம்மை வரவேற்றது.

### முருகனை நேரில்காண மக்கள் வெள்ளம்!

கோவிலுக்குள் சனம் முண்டியடித்துக்கொண்டு நின்றது. எல்லோருக்கும் முருகப் பெருமானை தரிசிக்க வேண்டும். (அதுவும் நேரில்!) என்ற மன உந்தல். நாங்கள் கோவிலை அடையவும், மதிய பூசை ஆரம்பமாகவும் சரியாகவிருந்தது. ஐயர் முருகனுக்கு — இல்லை, வேலுக்கு — ஆமாம் அங்கே மூலஸ்தானத்தில் இருப்பது முருகனின் வீரவேல்! வெற்றிவேலே — தீபங்காட்டிக் கொண்டிருந்தார் நெருக்கமாக நின்ற ஆண்கள், பெண்களுக்கிடையே நானும் கால் விரல்களில் எம்பி நின்று எட்டி எட்டி வேலை என் கண்களால் துளைத்தேன். ஒன்றுமே தெரியவில்லை!

(7-ம் பக்கம் பார்க்க)

## மணிவாக்கு

நேர்மையைக் கடைப்பிடிக்குங்கால் பிறர் குறை கூறுதலைப் பொருட்படுத்தாதே. முகஸ்துதிக்கும் வசமாகாதே.

— சுவாமி சிவானந்தர்.

BAYER

விவசாய இரசாயனப் பொருள் உண்டேன்

பாவித்து
நெற்பயிரைத் தாக்கும் இலை
தத்தி உட்பட மற்றும் பூச்சிகளையும்
கட்டுப்படுத்தவும்

தயாரித்து விநியோகிப்போர்

ஹேகெம் லிமிட்டட்

400, டீன்ஸ் வீதி, கொழும்பு தொலைபேசி: 93563 - 96331 - 6

Melville Amuly Designs

# மாவட்ட அமைச்சர் பதவியை ஏற்ற பின்பே மாகாணசுயாட்சி

## ஜனாதிபதி கூறியதாக ஈழவேந்தன் தகவல்

(மட்டக்களப்பு)

''மாவட்ட மந்திரிப்பதவிகளைத் தமிழர் விடுதலைக்கூட்டணியினர் ஏற்றுக்கொள்ளும் பட்சத்தில் அவர்களின் நடவடிக்கைகள் பற்றி ஆராய்ந்த பின் மாகாண சுயாட்சி பற்றி முடிவு செய்யலாம் என ஜனாதிபதி தெரிவித்துள்ளாராம்''

மட்டக்களப்பு நகரமண்டபத்தில் நடந்த அமரர் இராசமாணிக்கம் நினைவுதினக் கருத்தரங்கில் பேசிய, 'ஈழவேந்தன்' மேற்கண்டவாறு கூறினர்.

தமிழ் இளைஞர் பேரவையினால் ஒழுங்குசெய்யப்பட்ட இக் கருத்தரங்கு திரு. அ. செல்வேந்திரன் தலைமையில் நடைபெற்றது.

### 'டோர்ச்லைட்' வெளிச்சத்தில்...

இக் கருத்தரங்கிற்கு மின்சாரம் தடைசெய்யப்பட்டதால், 'டோர்ச்லைட்' வெளிச்சத்தில் கருத்தரங்கு நடைபெற்றது ஆயுதம் தரித்த பொலிசார், மண்டபத்தை சுற்றி கடமையில் ஈடுபட்டிருந்தனர்.

### அரசு-கூட்டணி இணைவது நிச்சயமற்றது

ஈழவேந்தன் தொடர்ந்து கூறியதாவது;

தமிழர் விடுதலைக் கூட்டணி அரசாங்கத்துடன் இணைவது நிச்சயமற்றதாகும் எமது நிபந்தனையுடன் மாவட்டமந்திரி பதவி பற்றி தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் நெருங்கிய தொடர்புள்ள பேராசிரியர் ஒருவர் அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

மாகாண சுயாட்சிபற்றி பின்னர் முடிவுசெய்யலாம் என ஜனாதிபதி பேச்சுவார்த்தையின்போது தெரிவித்துள்ளதாகவும் அவர் கூறினர்.

கற்குடா தமிழர் விடுதலைக் கூட்டணி அமைப்பாளர் திரு. சி. சம்பந்தமூர்த்தி கூறியதாவது;

### சம்பந்தமூர்த்தி பேச்சு

மாவட்ட அமைச்சர் பதவி மூலம், அல்லது பாலம், பாடசாலைகளைக் கட்டி இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்குவதால் தமிழ்ஈழ லட்சியத்தை நசுக்கிவிடமுடியாது.

தமிழ்இனத்திற்கு இன்றைய அரசு அரசியல் கூட்டத்தில் வழங்கியுள்ள அற்ப, சொற்ப சலுகைகள் நீதிஅமைச்சர் திரு. தேவநாயகத்தினல் பெறப்படவில்லை. தமிழர் விடுதலைக் கூட்டணியின் இடைவிடாத முயற்சியினலேயே பெறப்பட்டவையாகும்.

தமிழ்மொழியை தேசிய மொழியாக அரசு பிரகடனம் செய்திருப்பதாக கூறியபோதிலும் எத்தனையோ தமிழர்கள் சிங்களத் தேர்ச்சியின்மையால், வேலையிழந்து தவிக்கிருர்கள். கடந்த காலங்களில் கல்லோயா போன்ற இடங்கள் திட்டமிடப்பட்ட சிங்கள குடியேற்றங்களால் பிரித்தெடுக்கப்பட்டுவிட்டன,

ஏருவூர் தெற்கு முன்னள் கிராமசபைத் தலைவர் திரு. சி. ஆலாலசுந்தரம் பேசுகையில் தமிழ்ஈழம் மேடைப் பேச்சினல் பெறக்கூடியதல்லவென்றும் பாராளுமன்ற உறுப்பினர்களாலும் தரக்கூடியதல்லவென்றும் கூறினர்.

வணபிதா ஜோசப்மேரி அடிகளார், காத்தான்குடி ஜனப் இஸ்மயில் உட்பட பலர் பேசினர்கள். (ச-இ)

## மெய்வல்லுநர் போட்டி

(பண்டத்தரிப்பு)

நவாலி சென். பீற்றர்ஸ் ரோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி சென். பீற்றர்ஸ் தேவாலயமைதானத்தில் மேற்படி பாடசாலை அதிபச் திரு. வ. நடராஜா தலைமையில் நடைபெற்றது.

பிரதம அதிதியாக மானிப்பாய் வட்டாரக் கல்வியதிகாரி திரு. ச. தனஞ்செயன் கலத்துகொண்டார். யாழ்ப்பாண உதவி அரசாங்க அதிபர் திரு. அ. செபநாயகம் மங்கலவிளக்கேற்றினர். வெற்றிபெற்ற வீரர், வீராங்கனைகளுக்கு நவாலியூர் பங்குத்தந்தை அருட்திரு நேசநாயகம் அடிகளார் பரிசில் வழங்கினர். மைதான வைத்தியராக டாக்டர் அ. மரியதாஸ் கடமையாற்றினர்.

நடந்தேறிய போட்டிமுடிவுகளின்படி நீல இல்லம் 1ம் இடத்தையும், சிவப்பு இல்லம் இரண்டாம் இடத்தையும் பச்சை இல்லம் 3ம் இடத்தையும் பெற்றுக்கொண்டன. ஈற்றில் விளையாட்டுக்குழுவின் செயலாளர் திரு. கந்தையா ஆசிரியர் நன்றியுரை நிகழ்த்தினர். (உ)

## "உடல், உளவலிமை வாழ்வின் நிலை உயர்த்தும்"

(சுழிபுரம்)

''நோயற்ற உடல் உயரிய உள்ளம் இரண்டும் உடையவரே வாழ்வில் பூரண பயனை அனுபவிக்க முடியும். நாம் ஒவ்வொருவரும் முழு மனதுடன் இடையருது உழைத்தாற்ருன் பொருளாதார நெருக்கடியினின்றும் தப்ப முடியும். அவ்விதம் உழைப்பதற்கு வலிமை மிக்க உடலும் உறுதிமிக்க உள்ளமும் வேண்டும். இவ்விரண்டினையும் தரவல்லது விளையாட்டு. சிறு வயதில் இருந்தே பிள்ளைகள் விளையாட்டில் அதிக ஈடுபாடு உடையவர்களாவதற்கு இவ்வித விளையாட்டுப் போட்டிகள் மிகத்தேவையாகும்.''

இவ்வாறு இளவாலை மெய்கண்டான் வித்தியாலயத்தில் நடைபெற்ற விளைட்டுப் போட்டியில் பிரதம விருந்தினராக் கலந்துகொண்ட வலிகாமம் வடக்கு உதவி அரசாங்கஅதிபர் திரு. க மகாதேவா பேசுகையில் கூறினர்.

பாடசாலைக்கொடியை ஏற்றி வைத்து அவர் தொடர்ந்து பேசுகையில்,

நாட்டுக்குப் பயன் தரவல்ல நற்பிரஜைகளை உருவாக்குவதில் பாடசாலைகள் முன்னிற்கவேண்டும். இப்பாடசாலை விளையாட்டு வீரர்கள் மாவட்டப்போட்டிகளில் தெரிவு செய்யப்பட்டு அகில இலங்கைப் போட்டிகளில் பங்கு பற்றும் தகுதியைப் பெற்றமை மெச்சக்கூடியதாகும். கடந்த இரு ஆண்டுகளில் கரபந்தாட்டப் போட்டிகளிலும் இப்பாடசாலை கனிஷ்ட பிரிவினர் தொடர்ந்து சாம்பியன் விருதைப் பெற்றமையும் பாராட்டுக்குரியது என்ருர்.

இவ்விளையாட்டுப் போட்டிக்குரிய ஒலிம்பிக் தீபத்தை காங்கேசன்துறை வட்டாரக் கல்வி அதிகாரி திரு. பொ சிவஞானசுந்தரம் ஏற்றி வைத்தார் உரை நிகழ்த்தும்போது மாணவர்களுக்கு கல்வியும் விளையாட்டும் இரு கண்கள் போன்று இன்றியமையாதவை. இபபாடசாலை இவ்விரு துறையிலும் மிக்க ஊக்கமும் திறமையும் உடையதாய் இருப்பதை காணும்போது நான் மகிழ்ச்சி அடைகிறேன்'' என்ருர் (உ)

## மாதகலுக்கு எரிபொருள் நிலையம்

(பண்டத்தரிப்பு)

மாதகல்பகுதி மீனவர்களின் நலன்கருதி மாதகல்துறையில் எரிபொருள் விற்பனை நிலையமொன்றை விரைவில் நிறுவுவதற்கு இலங்கைபெற்ரோலியம் கூட்டுத்தாபனம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இப்பகுதியிலுள்ள மீனவர்கள் தங்கள் யந்திர மீன்பிடி வள்ளங்களுக்கு எரிபொருள் பெறுவதிலுள்ள கஷ்டங்களை பண்டத்தரிப்பு மீனவர் கூட்டுறவுச் சங்கத்திற்கூடாக மீன்பிடி அமைச்சுக்கு எடுத்துக் காட்டியதை அடுத்தே இப்பகுதியில் எரிபொருள்விற்பனை நிலையத்தை நிறுவநடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (உ)

## அரசியல் தலையீடு கரரணம்?

(மட்டக்களப்பு)

அரசியல் தலையீடு காரணமாக 15ஆயிரம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட ஈச்சந்தீவு கிராமசபைக்கான பொதுநூல்நிலையம் திறக்கப்படாமல் இருந்து வருவதாக படுவான் கரையிலிருந்து புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது. படுவான்கரையில் நிர்மாணிக்கப்பட்ட முதலாவது பொது நூலகம் இதுவாகும்.

மேற்படி நிலையப் பொறுப்பாளருக்குரிய நேர்முகப் பரீட்சை நடைபெற்று பத்து மாதங்களுக்கு மேலாகியும், இன்னும் நியமனம் வழங்கப்படவில்லையாம். இந்நியமன விடயத்தில் அரசியல் தலையீடு நடைபெற்றதாலேயே மேற்படி கட்டிடம் திறக்கப்படாமல் இருப்பதாகச் சொல்லப்படுகின்றது. (உ)

## கொழும்பில் 'மறந்துவிடு'

(கொழும்பு)

புங்குடுதிவு அபிவிருத்தி சமூகசேவா சங்கத்தின் ஆதவிரல் புங்குடுதீவு உதயதாரகை நாடக மன்றத்தின் ஆதரவில் ''மறந்து விடு'' என்னும் சமூக நாடகம் இம்மாதம் 30 திகதி மாலை பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபத்தில் நடைபெறவிருக்கிற. (உ)

## புதிய சட்டத்தரணி

(சரவணை)

புங்குடுதிவைச் சேர்ந்த செல்வி வாசுகிதேவி கந்தையா புதிய சட்டத்தரணியாகச்சத்தியப்பிரமாணம் செய்துகொண்டுள்ளார் ஓய்வுபெற்ற ஆசிரியர் திரு ஏ கே கந்தையாவின் புதல்வியான இவர், இளவாலை திருச்குடும்ப கன்னியர் மடத்தின் பழைய மாணவியாவார் (உ

## தெங்கு பனம் பொருள்

## கூ.ச.ஊழியரின் நீண்ட நாள் கோரிக்கை நிறைவேறியது

]யாழ்ப்பாணம்]

தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்க ஊழியர்கள் கடந்த 7 வருடங்களாகத் தங்களுக்கு ஆளணித்திரட்டு வழங்கப்படவேண்டுமென்று வற்புறுத்தி வந்த கோரிக்கை யாழ்ப்பாணம் வரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற கூட்டுறவுபிரதி ஆணையாளர். திரு. வீரமன் கலந்துகொண்ட மாநாட்டில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

மறுநாள் இலங்கை தெங்கு பனம்பொருள ஊழியர் சங்கத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் திரு வீரமன் கலந்துகொண்டார். அப்போது மேற்படி ஊழியர் சங்க பொதுச்செயலாளர் திரு. வி. ஜி. தங்கவேல் பின்வரும் கோரிக்கைகளை கூட்டுறவு பிரதி ஆணையாளரிடம் சமர்ப்பித்தார்.

### கோரிக்கைகள்

''கூட்டுறவுச் சங்கங்களின் மொத்த லாபத்தில் 45 சதவிதம் ஊழியர்களுக்குச் சம்பளமாக வ்ழங்கப்படவேண்டும். 1975ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட பனை வெல்லத் தொழிற்சாலைகளின் ஊழியர்களுக்கு மீண்டும் வேலை வழங்கும் பொருட்டு 1979ல் ஆவது மேர்படி தொழிற்சாலைகளை இயக்கி பாணி உற்பத்தி செய்து வடிசாலைக்குச் சாராயம் வடிக்க அனுப்பவேண்டும். சங்கங்களின் நிர்வாக சபையில் ஊழியர் சங்கப் பிரதிநிதியொருவர் சலந்துகொள்ள அனுமதிக்க வேண்டும். எதிாவரும் வரவு செலவுத் திட்டத்தில் ஊழியர்களுக்கு அரசாங்கம் சமபள உயர்வு வழங்கும்போது தற்பொழுது சங்கங்கள் அரசாங்கத்துக்குச் செலுத்தும் வரியிலிருந்து உயர்த்தப்படும் ஊழியர் சம்பளம் கழிக்கப்பட்ட பின்பே வரி செலுத்தப்படவேண்டும்.''

### சங்க வளர்ச்சிக்கு ஒத்துழைக்கக் கோரிக்கை

ஆணையாளர் திரு. வீரமன் அங்கு உரையாற்றுகையில் மேற்படி சங்கங்களின் வளர்ச்சி குறிப்பிட்ட சமுகங்களின் பொருளாதார வளர்ச்சிக்கு உறுதுணையாக இருப்பதனல் தொழிற்சங்கப் போராட்டங்களை நடை முறைப்படுத்தாமல் சங்கங்களின் வளர்ச்சிக்கு ஒத்துழைக்குமாறும் அமைக்கப்பட்டுள்ள பனம் பொருள் அபிவிருத்திச் சபை செயற்படத் தொடங்கியதும் ஊழியர்களுக்கான சகல பிரச்னைகளும் தீர்த்துவைக்சப்படும் என்றும் அதனல் தொழில் அபிவிருத்தியில் புரட்சிகர மாற்றம் ஏற்படும் என்றும் தெரிவித்தார்

இக்கலந்துரையாடலில் ஊழியர் சங்கப் பிரமுகர்களும், கூட்டுறவு உத்தியோகத்தர்களும் கலந்துகொண்டனர் [கூ-அ]

## காட்டுக்குள் எலும்புக்கூடு வேப்பங்குளத்தில் பரபரப்பு

### கொலையெனச் சந்தேகம்

(உப்புவெளி)

திருகோணமலை - அனுராதபுரம் வீதியில் உப்புவெளி பொலிஸ்நிலையத்திற்குப் பத்து மைல் தொலைவில் காட்டுக்குள் மனித எலும்புக்கூடு ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது.

வேப்பங்குளம் என்ற பகுதிக் காட்டிலேயே 30 வயது மதிப்பிடத்தக்க இம் மனித எலும்புக்கூடு கண்டெடுக்கப்பட்டது.

வெள்ளைநிற ஷேர்ட், பட்டிக் சாரம், வேட்டி, சில பத்திரங்கள் என்பன கொண்ட சூட்கேஸ் ஒன்றும் இதற்கருகில் கண்டெடுக்கப்பட்டது. இது ஒரு கொலையெனக் கருதும் பொலிசார் திவிர புலன் விசாரணை மேற்கொண்டுள்ளனர். (உ)

## யாழ். வை. எம். ஸி. ஏ.

(அரியாலை)

யாழ்ப்பாணம் வை. எம். ஸி. ஏ ஸ்தாபனத்தின் வருடாந்தக் கூட்டத்தில் புது வருட நிர்வாகிகளாக தலைவர்: திரு எஸ். பத்மநாதன், உபதலைவர்: திரு. சாம். எஸ். சதாசிவன், செயலாளர்; திரு. ஆர். எஸ். எட்வேட், பொருளாளர்: திரு. எல். ஆர். முத்தையா ஆகியோரும் நிர்வாக உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். (அ)

## பெ. ஆ. சங்கம் ரூ. 25 ஆயிரம் நிதி உதவி

]புலோலி[

பருத்தித்துறை, புலோலி ஆண்கள் மகாவித்தியாலயத்திற்கு இரண்டு மாடிக்கட்டிடமொன்று அமைக்கப்படவுள்ளது'

இதற்கு இம் பாடசாலையின் பெற்ருேர் ஆசிரியர் சங்கம் 25,000 ரூபா பணத்தை வழங்கியுள்ளதுடன், மிகுதிப் பணத்தை பருத்தித்துறை எம். பி. ஒதுக்கித்தரவேண்டுமெனவும் எம். பி.யைக் கோரியுள்ளது. [அ]

## வல்லையில் உப்பு!

[புலோலி]

வல்லைவெளிப்பகுதியில் உள்ள ஏரிகளில் பெருமளவில் கறியுப்பு விளைந்துள்ளது. இப்பகுதிகளில் உள்ள மக்கள் இவ்வுப்பினைத் தாராளமாக அள்ளிச்செல்கின்றனர்

கடுமையாக எறிக்கும் வெயில் காரணமாக தொண்டமானுறுகடல் சங்கமமாகும் ஏரிகளில் உள்ள நீர் மிக விரைவாக ஆவியாவதினல் இந்த உப்பு விளைகிறது. [அ]

## சிரமதானம்

(கொடிகாமம்)

மீசாலை வடக்கு வேம்பிராய் கிராம அவிருத்திச் சங்கத் தலைவர் திரு. சதா நடராஜா தலைமையில் மீசாலை வடக்கு வேம்பிராய் விவசாய உத்தியோகத்தர் வேலாயுதபிள்ளை கிராமசபை பிரதம லிகிதர் எஸ். ரி. குணநாயகம் மேற்பார்வையில் பொது மக்களினல் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் சிரமதான மூலம் வேம்பிராய் மயானம் துப்புரவு செய்யப்படுகிறது. (உ)

## வாலிபர்கள் விடுதலை

]புலோலி]

கல்முனையிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு பனை உற்பத்தி பொருட்களான பெட்டிகள் பாய்கள் என்பனவற்றை வாங்குவதற்கு வந்த மூன்று பெல்போட்டம் வாலிபர்கள் வல்வெட்டித்துறைப் பொலிசாரினல் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டனர்.

இம்மூன்று வாலிபர்களும் பருத்தித்துறை நீதிபதி திரு. கே. ஞானச்சந்திரன் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர். [க[

# நோர்வே பெண்கள்குழு வட்டு. விஜயம்

(யாழ்ப்பாணம்)

நோர்வே குடும்பப் பெண்கள் சங்கம் வட்டுக்கோட்டை நல்லெண்ண வாலிபர்சம்மேளனத்தில் ஆக்கப்பணிகளுக்கு உதவி செய்வதாக உறுதி அளித்துள்ளது.

இலங்கையில் விஜயத்தை மேற்கொண்டிருக்கும்நோர்வே குடும்பப்பெண்கள் சங்கத்தைச் சேர்ந்த குழு ஒன்று நேற்றுமுன்தினம் வட்டுக்கோட்டை நல்லெண்ண வாலிபர் சம்மேளனத்திற்கு வந்திருந்தபோதே மேற்கண்டவாறு உறுதி அளித்தது.

மேற்படி சம்மேளனத்தின் ஆதரவில் இயங்கிவரும் நீள்தூண்டில தொழிற்சாலையையும் நைலோன் மடங்கு தொழிற்சாலையையும் தையல் பயிற்சிப் பாடசாலையையும் பார்வையிட்ட பின்னர் கருத்தரங்கு ஒன்றிலும் இக்குழுவினர் கலந்துகொண்டனர்.

சம்மேளனத் தலைவர் திரு. அ. அரியரத்தினம் தலைமையில் நடைபெற்ற கருத்தரங்கில் பேசிய மேற்படி குழுவின் தலைவி திருமதி ரெமோதை சம்மேளனத்தின் தீவிரமுயற்சிகளைப் பாராட்டியதுடன், சம்மேளனத்தின் ஆக்கப்பணிகளுககு பல உதவி செய்யத் தாம் விரைவில் நடவடிக்கை எடுப்பதாகவும் உறுதி அளித்தார். (இ)

# விடுதலை

[பண்டத்தரிப்பு]

12 போத்தல் கள்ளை சட்டவிரோதமாக வைத்து விற்பனை செய்ததாக 12 வயது சிறுவன்மீது மதுபரிபாலன இலாகா அதிகாரிகளினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு மல்லாகம் மாவட்ட நீதிபதி திரு எஸ் ஆனந்த குமாரசாமி முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது விசாரணை முடிவில் மேற்படி மாணவனை நிரபராதியாகக் கண்டு நீதிபதி விடுதலை செய்தார்

சிறுவன் சார்பில் ஆஜரான சட்டத்தரணி திரு மு திருநாவுக்கரசு, இவரது தந்தை ஒரு சீவல் தொழிலாளி என்றும் தவறணைக்கு மேற்படி களளை எடுத்துச் சென்ற போது அங்கு தவறணை பூட்டப்பட்டிருக்கவே அதற்கு முன்பாகவிருந்த கடையொன்றில் கள்ளைவைத்துவிட்டு மகனை காவலுக்குவிட்டுச் சென்றதாகவும் அப்போது மது பரிபாலன அதிகாரிகள் அவரை பிடித்ததாகவும் நீதிபதியிடம் கூறினர். சட்டத்தரணியின் வாதத்தை ஏற்று மாணவனை விடுதலை செய்து தீர்ப்பளித்தார. (உ)

# "கயரோக தடுப்புசேவை அதிகரிக்கப்படவேண்டும்"

## -- யாழ். அரசாங்க அதிபர்

(புலோலி)

கயரோக நோயிலிருந்து மக்கள் விடுபடத் தாம் பிரார்த்திப்பதாகவும் கயரோக நிவாரண சங்கத்தினர், அவர்களது சேவையை மேலும் அதிகரிக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்றும் யாழ். அரசாங்க அதிபர் திரு. லயனல் பெர்னண்டோ, வடமராட்சிப்பகுதியில் இலங்கை கயரோக தேசிய நிவாரண சங்கத்தால் கொண்டாடப்பட்ட கொடி தினத்தில் முதலாவது கொடியை வாங்கி, விற்பனையை ஆரம்பித்துவைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

வடமராட்சி வடக்கு, கிழக்கு பிரிவு உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தில் நடைபெற்ற இவ்வைபவத்தில், மேற்படி சங்கத்தின் வடமராட்சிக் கிளைத் தலைவர் திரு. ஏ. கே. மாணிக்கத்திடமிருந்து யாழ். அரசாங்க அதிபர் முதலாவது கொடியை வாங்கினர். வடமராட்சி வடக்கு, கிழக்குப் பிரிவு உதவி அரசாங்க அதிபர் திரு. வை. மேலும்மயிலும் இரண்டாவது கொடியை வாங்கினர். இவ்வைபவத்தையடுத்து வடமராட்சிப்பகுதியிலுள்ள சகல இடங்களிலும் இக்கொடி விற்பனை செய்வதற்கான எல்லா நடவடிக்கைகளையும் இக்கிளையின் செயலாளர் திரு. இராமநாதன் மேற்கொண்டார். (அ)

# "சனசமூக நிலையங்கள் மக்கள் நலன்கருதி சேவையாற்ற வேண்டும்"

(யாழ்ப்பாணம்)

"சனசமூக நிலையங்கள், சமுதாயத்தில் வாழும் மக்களின் நலன்கருதி பல்வேறு வகையான சேவைகளில் ஈடுபடவேண்டும் எனவே சமூக முன்னேற்றத்திற்கு சனசமூக நிலையங்களின் பங்கு மிகவும் அவசியம்" என்று உடுவில் வலி தெற்கு - உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ். எஸ். குமாரசாமி சுன்னாகம் மயிலணி வடக்கு ஜனசக்தி சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெற்ற யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் மாதிரி அபிவிருத்தித்திட்ட ஒன்றியத்தின் கருத்தரங்கு, வடபகுதி சனசமூக நிலையங்களின் மேற்பார்வையாளர் திரு. வ. கிருஷ்ணசாமி தலைமையில் நடைபெற்றபோது அதில் கலந்துகொண்டு பேசுகையில் குறிப்பிட்டார்.

திரு. குமாரசாமி தொடர்ந்து பேசுகையில் "கிராமப் பகுதிகளில் வாழும் மக்கள் சமூக-பொருளாதார,அரசியல் துறைகளில் ஈடுபட்டுஉழைக்க வேண்டும். தற்பொழுது அரசு இந்நிலையங்களின் மூலமாக பல ஆக்கபூர்வமான வேலைகளைச் செய்வதற்கு முன்வந்துள்ளது. தற்பொழுது நாட்டில் சமூகக் குறைபாடுகளை நீக்கி எல்லாமக்களையும் ஒரே இனமக்கள் எனக்கருதும் தன்மையை இந்நிலையங்கள் மூலமாக ஏற்படுத்த வேண்டு" என்றார்.

உடுவில் கமத்தொழில் போதனாசிரியர் திரு. ஜோண் பத்திநாதன் பேசுகையில், "பயன்தரக்கூடிய மரங்களை நாட்டி அதன்மூலம் நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்த வேண்டும். இதற்காக அரசாங்கம் இவ்வியக்கத்திற்கு உதவ முன்வந்துள்ளது. மரம்நடும் இயக்கத்தில் இளைஞர்கள் கூடியளவு ஊக்கம் எடுக்க வேண்டும்" என்றார்.

சுன்னாகம் பட்டின சபை விசேஷ ஆணையாளர் திரு. இ. இராமலிங்கம், யாழ்.மாவட்ட இளைஞர் சேவைமன்ற உத்தியோகத்தர் திரு. எஸ் நீலகண்டன், சுன்னாகம் கிராம சேவையாளர் திரு. வி. நடராசா, பொது சௌக்கிய பரிசோதகர் திரு. எஸ். புலேந்திரன், நிலையச் செயலாளர் திரு. ஆ. சொர்ணலிங்கம் ஆகியோர் உரைநிகழ்த்தினர்.

ச. ச. நிலையங்களின் மாதிரி அபிவிருத்தித்திட்ட ஒன்றியத்தின் கருத்தரங்கு, அடுத்த மாதம் கரவெட்டி. கரணவாய்தெற்கு வள்ளுவர் ச. ச. நிலையத்தில் நடத்துவதென முடிவுசெய்யப்பட்டது. (ஈ)

# குற்றத்தை ஏற்றார்

(பண்டத்தரிப்பு)

உரும்பராய் பகுதியிலுள்ள வீடொன்றில் அத்துமீறிப் பிரவேசித்து 360 ரூபா பெறுமதிமிக்க பொருட்களை திருடியதாக வசந்தகுமார் என்னும் இளைஞர் மீது குற்றம் சாட்டி தொடரப்பட்ட வழக்கில் சந்தேகநபர் குற்றத்தை ஒப்புக்கொண்டார்.

மல்லாகம் மாவட்ட நீதிமன்ற நீதிபதி திரு. ஆனந்த குமாரசாமி அவருக்கு ஒரு வருட கடூழியச் சிறைத்தண்டனை விதித்து அதனை 5 வருடங்களுக்கு ஒத்திவைத்து தீர்ப்பளித்தார்.

எதிரிசார்பில் சட்டத்தரணி திரு. மு. திருநர்வுக்கரசு ஆஜரானர்.

# கட்டணத்தில் மோசடி; கண்டக்டர் வேலைநீக்கம்!

[புலோலி]

புதிதாக நியமனம்பெற்ற இ. போ. ச. கண்டக்டர் ஒருவர் இலங்கைப்போக்கு வரத்துச்சபையால் மேற்கொள்ளப்படும் நியமன நிபந்தனைக்கு முரணாக மோசடியைப் புரிந்தமையால் வேலைநீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

பிரயாணச் சீட்டுக்கள் சரி பார்க்கப்படும் வடபிராந்திய போக்குவரத்துச்சபையின் கோண்டாவில் காரியாலயத்தில் உள்ள கணக்காளர் பிரிவினால் இம்மோசடி கண்டு பிடிக்கப்பட்டது.

முல்லைத்திவு இ. போ. ச. டிப்போவில் கடமையாற்றிய பஸ் கண்டக்டர் ஒருவரே மேற்படி மோசடியிலீடுபட்டவராவர்.

நாயாறு-நீர்கொழும்பு பஸ் சேவையில், புதிதாக நியமனம் பெற்ற இக் கண்டக்டர், நாயாறு நீர்கொழும்புக்குச் செல்லும் பிரயாணிகளுக்கு வழங்கப்பட்ட பிரயாணச் சீட்டில் அதற்குரிய பிரயாணக் கட்டணம் 11 ரூ. 60 சதத்தை எழுதி வாங்கி விட்டு, பிரயாணச் சீட்டின் மூலப் பிரதிகளில் 4 ரூ. 60 சதமாக மாற்றி ஒரு பிரயாணச் சீட்டில் ஏழு ரூபா வீதம் கணிசமான பணத்தை மோசடி செய்து வந்துள்ளாராம். இது சம்பந்தமாகவே இவர் வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளார். (க)

# உடுப்பிட்டியில் த.காங்கிரஸ் பிரசாரம்

[நெல்லியடி]

உடுப்பிட்டித்தொகுதியில் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கருத்தரங்குகள் பரவலான முறையில் நடாத்தப்பட்டு வருகின்றது. மேலும் கருத்தரங்குகளை ஒழுங்கு செய்ய காங்கிரஸ் ஆதரவாளர்கள் முயற்சிகள் செய்து வருவதாக தமிழ்க் காங்கிரஸ் வாலிபமுன்னணியைச் சேர்ந்த திரு. இ. ஆனந்தராஜா தெரிவித்தார்.

கிளைகளின் அமைப்புவேலைகள் மிகவும் குறுகிய காலத்தில் சிறப்பாக நடாத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். [உ]

# "பொலிஸ் நிலையம் வருவதற்கு எவரும் அஞ்சத்தேவையில்லை"

(புலோலி)

"பொதுமக்களின் பாதுகாப்புக் கருதி, அவர்களுக்கு வேண்டிய உதவிகளை அளிப்பதற்காகப் பொலிஸ்நிலையம் எந்த நேரமும் திறந்திருக்கும். பொதுமக்கள் எந்த நேரமாவது பொலிஸ் நிலையத்திற்கு வந்து தங்கள் பிரச்னைகளைத் தீர்த்துக் கொள்ளலாம். பொலிஸ்நிலையத்திற்கு வருவதற்கு இளைஞர்களோ அல்லது பெரியோர்களோ அஞ்ச வேண்டியதில்லை".

புலோலி தெற்கு பெரியதேவன் சனசமூக நிலையத்தில் நடைபெற்ற கிராமியத் தொண்டர்களை நியமிக்கும் கூட்டத்தில் தலைமைதாங்கி உரையாற்றிய பருத்தித்துறை இன்ஸ்பெக்டர் திரு நிஹால் ஜெயசேகரா மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் இலங்கையைப் பொறுத்தவரையில் கொலை, கொள்ளை; கற்பழிப்புபோன்ற குற்றச் செயல்கள் அதிகரித்து வருகின்றன. புள்ளிவிபரப்படி நோக்கும்போது பத்துவீத மாணவர்களே குற்றச் செயல்களைப் புரியாதவர்கள் என்பதைக் காணக்கூடியதாகவுள்ளது, இந்நிலை மாறவேண்டும்" என்றார்.

இக்கூட்டத்தில் கிராமியத் தொண்டர்களாக 20 இளைஞர்கள் தெரிவுசெய்யப்பட்டனர், இத் தொண்டர்கள் வல்லிபுரப் பிரதேசப்பகுதியில் சட்டவிரோதமாக மண் அள்ளிச்செல்லும் வாகனங்களையும் சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடுவோரையும் கண்காணிப்பார்கள். (க-அ)

# புலோலி அதிபரின் கண்டிப்பு: 140 மாணவர் தமது நீள்சடையை அகற்றினர்

]புலோலி]

நீண்ட தலைமுடியுடன் பாடசாலையில் இருந்த மாணவர்கள் திடீரென்று பாடசாலையைவிட்டு வெளியேறி, தமது நீண்ட தலைமுடியை வெட்டவேண்டியநிலை ஏற்பட்டது. பருத்தித்துறையிலுள்ள புலோலி ஆண்கள் மகாவித்தியாலயத்தின் நீண்டசடை வளர்த்த மாணவர்களுக்கே இக்கதி ஏற்பட்டது.

மாணவர்களின் ஒழுங்கு நடவடிக்கைகளை நுணுக்கமாக அவதானித்துவரும் பாடசாலை அதிபர், திரு. சே. ஏகாம்பரநாதனும், ஒழுங்குக் கட்டுப்பாட்டாசிரியர் திரு. குலசிங்கமும், நீண்ட தலைமுடி வளர்த்த மாணவர்கள் எவரையும் வகுப்புக்குள் அனுமதிக்கவேண்டாமென சகல ஆசிரியர்களுக்கும் அறிவித்தல் ஒன்றை அனுப்பினர்.

இங்கிருந்த நீண்ட தலைமுடி வளர்த்த சுமார் 140 மாணவர்கள் இந்த இக்கட்டான நிலைக்குள்அகப்பட்டிருந்தனர். இவர்கள் அனைவரையும் அழைத்த அதிபர் ஒழுக்கமும், சுகாதாரமும் கருதி தலைமுடி நீண்ட எவரும் வகுப்புக்குள் அனுமதிக்கப்படமாட்டார்கள் எனவும் நீண்ட தலைமுடிகள் வெட்டப்பட்ட பின்பே வகுப்புக்குள் அனுமதிக்கப்படுவார்கள் எனவும் கூறினர்.

இதற்கிணங்க, வெளியேறிய மாணவர்கள தங்கள் நீண்ட தலைமுடியை வெட்டிக் கொண்டுவந்தபின்னர் வகுப்புகளுக்குச்செல்ல அனுமதிக்கப்பட்டனர். பெற்றோரின் பூரண ஆதரவும் அதிபருக்குக் கிடைத்தது. (அ)

## வவனியாவில்...

[வவனியா]

நீண்ட தலைமுடியை வைத்திருந்த மாணவர்கள் பாடசாலை செலவில் தலைமுடியை வெட்டிக்கொண்டனர். வவனியா தமிழ் மகாவித்தியாலயத்தில், நீண்ட தலைமுடியுடன் பாடசாலைக்கு வரக்கூடாது என்ற அதிபரின் அறிவுறுத்தலை கவனத்திற்கொள்ளாத மாணவர்களே இவ்வாறு பாடசாலை செலவில் முடிவெட்டிக் கொண்டவராவர்.

நீண்ட தலைமுடியுடன் பாடசாலைக்கு வந்த மாணவரை கண்டுபிடித்த அதிபர், ஒரு மணித்தியால லீவும், பணமும் கொடுத்து தலைமுடியைவெட்டுவித்தார். முதலாம்முறை முடிவெட்டிய மாணவன் ஒருவன் வெட்டியது போதாது என்ற காரணத்தினால் இரண்டாம் முறையும் பாடசாலை செலவில் தலைமுடியைக் குறைத்துக்கொண்டார். [உ]

# "தொழில்நுட்ப வேலைகளில் இளைஞர் ஈடுபடவேண்டும்"

(புலோலி)

"தற்பொழுது நாட்டில்ஏற்பட்டிருக்கும் மேசன், தச்சர் போன்ற தொழில்நுட்பவேலைகளைச் செய்வோருடைய தட்டுப்பாட்டைநீக்க இளைஞர்கள் முன்வரவேண்டும்இவ்விளைஞர்கள் உத்தியோக மோகத்தினை மறந்து இத்தொழில்களில் ஈடுபடுவார்களானல் அதிக வருவாயைப் பெறுவதுடன், நாட்டின் அபிவிருத்தியிலும் ஈடுபட்டவர்களாவர்".

புலோலி புற்றளை மகாவித்தியாலய புதிய மேல்மாடிக்கட்டிட அடிக்கல்லை நாட்டிவைத்துப்பேசிய பருத்தித்துறைத் தொகுதி எம். பி, திரு. க. துரைரத்தினம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்

அவர் தொடர்ந்து பேசுகையில், உத்தியோக நோக்கத்துடன் இளைஞர்கள் எம். பி மாரைத் தேடிப் போவது தவிர்க்கப்படவேண்டும். உத்தியோகம் வழங்குவதால் இளைஞர்களோ அல்லது எம். பி. மாரோ திருப்திப்படமுடியாதுள்ளது. உத்தியோகம்பெற்ற இளைஞர்கள் அடுத்தபடியாக பதவி உயர்வு, இடமாற்றம் போன்றவற்றிலேயேகண்ணும் கருத்துமாய் உள்ளனர். இது இருபகுதியினருக்கும் சிரமத்தையே ஏற்படுத்துகிறது. நமது இளைஞர்கள் சுயதொழில்களில் ஈடுபடுவதனல் இப்பிரச்னைகளில் இருந்து விடுபடலாம்.

பொது வேலைகள் சம்பந்தமாக எந்த உதவிகளையும் செய்ய நாம் தயாராக உள்ளோம். கிராம முன்னேற்றச் சங்கங்கள் தங்கள் தங்கள் வேலைகளைப் பொறுப்பேற்று திறம்படச் செய்ய வேண்டும் கிராம முன்னேற்றச் சங்கங்கள் மூலம்தான் கிராமங்களை முன்னேற்ற முடியும்.

# மகாஜன மகத்தான வெற்றி

[யாழ் விளையாட்டு நிருபர்]

தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரிக்கும் காங்கேசன் துறை நடேஸ்வராக் கல்லூரிக்கும் இடையிலான விளையாட்டுப் போட்டியில் மகாஜனக் கல்லூரி 5-0 கோல்களால் மகத்தான வெற்றியீட்டியது.

இப்போட்டி கடந்த திங்கட்கிழமை யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்றது. இப்போட்டிக்கு நடுவராக திரு. கே. நாகமணி கடமையாற்றினர். ]உ]

# பாகிஸ்தானுக்கு அமெ. போர் விமானங்கள்

வாஷிங்டன், அக். 10
ஊடுருவித்தாக்கும் ஜெட் போர் விமானங்களை அமெரிக்கா பாகிஸ்தானுக்கு விநியோகம்செய்யத் தீர்மானித்துள்ளது.

சலுகை அடிப்படையில் அல்லது வர்த்தக அடிப்படையிலேயே இப் போர் விமானங்களை அமெரிக்கா பாகிஸ்தனுக்கு வழங்கும் என்று வெள்ளைமாளிகை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்,

அமெரிக்காவின் இம்முடிவு குறித்து இந்திய வெளிநாட்டமைச்சர் திரு ஏ. பி. வாஜ்பாய் அதிருப்தி தெரிவித்துள்ளார். (இ)

# இந்திரா தேர்தல் முடிவு மறுநாளே தெரிந்துவிடும்

சிக்மகளூர், அக். 10
அடுத்த 6ம் திகதி நடைபெறும் சிக்மகளூர் இடைத் தேர்தல் முடிவு மறுநாள் 17ம் திகதியே வெளியிடப் பட்டுவிடும் என்று தேர்தல் ஆணையாளர் வட்டாரம் தெரிவித்துள்ளது.

7ம் திகதி காலை வாக்குகள் எண்ணைப்பட்டு அன்று மாலை அல்லது இரவு முடிவு அறிவிக்கப்பட்டுவிடும்என்றும் தெரிவிக்கப்பட்டது.

இத் தொகுதியில் போட்டியிடுமதற்காக திருமதி காந்தி உட்பட இதுவரை 4 பேர் நியமனப்பத்திரங்களைத் தாக்கல் செய்துள்ளனர். (இ)

# பூட்டோ ஆதரவாளர்கள் தொடர்ந்து கைது!

## அப்பீல் தீர்ப்பு வெளிவரும் போது கலவரத்தை தடுக்க நடவடிக்கை

இஸ்லாமாபாத், அக் 10
பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் ஜனப் சுல்பிகார் அலி பூட்டோவின் ஆதரவாளர்களை இராணுவ அரசு கைது செய்து வருகிறது என்று இஸ்லாமாபாத் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஜனப் பூட்டோவுக்கு எதிரான அப்பீல் வழக்கின் தீர்ப்பு வழங்கப்பட் இருப்பதை அடுத்து ஏற்படும் கலவரங்களைத் தவிர்க்கும் பொருட்டே அவரின் ஆதரவாளர்கள் கைது செய்யப்பட்டு வருகின்றனர் என்றும் தெரிவிக்கப் பட்டது.

இதுவரை இராணுவ அரசு 500 பூட்டோ ஆதரவாளரைக் கைது செய்து காவலில் வைத்துள்ளது. (இ)

# வியட்நாம், பிலிப்பைன்ஸில் புயல்

மணிலா, அக். 10
வியட்நாமிலும், பிலிப்பைன்சிலும் கடந்த சில நாட்களாக புயற்காற்று தொடர்ந்து வீசிவருவதாக அறிவிக்கப்பட்டது.

வடவியட்நாமிலேயே புயற்காற்றினால் அதிக சேதம் ஏற்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டது. (இ)

# பிகாரில் மீண்டும் வெள்ளம்

புதுடில்லி. அக் 10
பிகாரில் தொடர்ந்து கனத்த மழை பெய்து வருவதால் மீண்டும் வெள்ள அபாயம் தோன்றியுள்ளது.

முசப்பூர் மாவட்டத்தில் மட்டும் இதுவரை வெள்ளத்துக்கும் கொள்ளை நோய்க்கும் 187 பேர் பலியாகினர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# அமெரிக்கா எச்சரிக்கை

குவைத், அக் 10
'காம்ப் டேவிட் உடன்படிக்கைக்கு ஜோர்தானும் சவூதி அரேபியாவும் தொடர்ந்தும் எதிர்ப்புத் தெரிவிக்குமாயின் இந்நாடுகளுடனான அரசியல், பொருளாதார, இராணுவ உறவுகளை மறுபரிசிலனை செய்யப் போவதாக அமெரிக்கா எச்சரிக்கைசெய்துள்ளது' என குவைத் பத்திரிகையான 'அல்-குவா பாஸ்' எழுதியுள்ளது. (இ)

# விசாரணை நடுவில் எதிரிகள் விடுதலை

(வவனியா)
லொறிக்கு சேதம் விளைவித்து 5000 ரூபா கொள்ளையடித்ததாக குற்றம் சாட்டி தொடரப்பட்டவழக்கில் விசாரணை நடுவில் எதிரிகள் விடுதலை செய்யப்பட்டனர்.

இவ்வழக்கு வவனியா நீதிமன்றத்தில் நீதவான் பற்றிக் பேர்ணண்டோ முன்னிலையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இவ்வழக்கில் 78 செப்டம்பர் 21-ம் தேதி லொறியொன்றுக்கு சேதம் விளைத்ததாகவும் இரவு நேரத்தில் 5000 ரூபாவை கொள்ளையடித்ததாகவும் யூனில் பியதாசா சிறிபாலா, ஜிவரத்தின ஆகியோர் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

எதிரிகள் சார்பில் சட்டத்தரணி ஜி. ஜி. பொன்னம்பலம் (ஜீனியர்) சட்டத்தரணி எம். சிற்றம்பலத்தின் அனுசரணையுடன்ஆஜாரானார்.

# சனசமூக நிலையங்களின் சமாசம்

[யாழ்ப்பாணம்]
வலிகாமம் மேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவு சனசமூக நிலையங்களின் சமாச அங்குரார்ப்பணக் கூட்டம் சமீபத்தில் சங்கானை உதவி அரசாங்கஅதிபர் திரு. எம். சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்றது.

சமாசத்தின் புதிய செயற்குழுவினராகப் பின்வருவோர் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

போஷகர்கள் திருநாவுக்கரசு (தேசிய அரசுப்பேரவை உறுப்பினர்) திரு. எம் சுப்பிரமணியம் (உதவி அரசாங்க அதிபர்) திரு வி. கிருஷ்ணசாமி (சனசமூக நிலைய மேற்பார்வையாளர்).

தலைவர் திரு. க. சிவஸ்கந்தா, உபதலைவர் திரு. மு. சிவராசா, கபரியதரிசி திரு. கி. தாமோதரம்பிள்ளை, உபகாரியதரிசி திரு. சி. வரதராசய தனதிகாரி திரு. சி. யோகராசா திருவாளர்கள் வி. சிற்றம்பலம், மு. கதிர்காமநாதன், க. சுப்பிரமணியம், த. நவரத்தினம் ந. கலாநிதி ம. சற்குணசிங்கம் ஆகியோர் நிர்வாக சபை உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டனர். (இ)

# திருத்த வேலைகள் துரிதம்

(மட்டக்களப்பு)
புதிய காத்தான்குடி பதுரியா பள்ளிவாசல் திருத்த வேலைகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. கடந்த சிலகாலமாக மந்தகதியில் இயங்கவந்த மேற்படி வேலைகள் புதிய நம்பிக்கைப் பொறுப்பாளர் ஜனப். எம். எம். வெளலானவின் நேரடிக் கண்காணிப்பில் நடைபெற்று வருகின்றன. (உ)

# "ஜே. ஆரை சந்தித்ததலைவர்கள் அறிக்கைவிட வேண்டும்"

(யாழ்ப்பாணம்)
ஜனதிபதியை கூட்டணி தலைவர்கள் சந்தித்ததுபற்றி பண்டிதர் கா. பொ. இரத்தினம் அறிக்கைவிட்டிருக்கிறார். ஜனதிபதியை சந்திக்க சென்ற குழுவில் பண்டிதர் இரத்தினம் செல்லவில்லை. ஆதலால் அவர் அறிக்கை விடுவதில் அர்த்தமில்லை. ஜனதிபதியை சந்தித்த கூட்டணி தலைவர்கள் அதுபற்றி அறிக்கைவிடவேண்டும்.

கந்தர்மடம் பழம் ரோட் பிள்ளையார் கோவிலுக்கருகாமையில் நடந்த கருத்தரங்கில் பேசுகையில் தமிழ் காங்கிரஸ் பொதுச் செயலாளர் திரு ஜி. ஜி. பொன்னம்பலம் மேற்கண்டவாறு கூறினர்.

திரு. என். சிறினிவாசன் தலைமையில் நடந்த இக்கருத்தரங்கில் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் மேலும் கூறியதாவது: ஜனதிபதியை சந்தித்த கூட்டணித் தலைவர் திரு. சிவசிதம்பரம், திரு. செல்லத்தம்பு ஆகியோர் இவ்விடயத்தில் மௌனம் சாதிக்கும் போது, ஜனதிபதியை சந்திக்காத, பண்டிதர் இரத்தினம் வழக்கம்போல் இவ்விடயத்திலும் ஒரு அறிக்கை விட்டிருக்கிறார் அதில் மறுப்பு தெரிவித்திருக்கிறார். ஆனல் இதுவரை ஜனதிபதியை சந்தித்த கூட்டணி தலைவர்கள் மறுப்பு தெரிவிக்கவில்லை.

கூட்டணி செயற்குழு முடிவுக்கு கட்டுப்பட்டு, கூட்டணி எம். பி.க்களில் சிலர் சத்தியப்பிரமாணம் செய்யவில்லை பட்டிருப்பு எம். பீ. எதிர்க்கட்சித் தலைவரின் வரவை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார். சத்தியப்பிரமாணம் தொடர்பாக தலைமைப்பீடத்திற்கு கடிதம் எழுதிய வவுனியா எம். பி. அவசரமாகப் போய் சத்தியப்பிரமாணம் எடுத்திருக்கிறார். எல்லாம் மர்மமாக இருக்கிறது

தமிழினத்தை எதிர்நோக்கும் பெரியவிஷயம் இது. அரசில் சேருவதுபற்றியும், மாவட்ட மந்திரி பதவிபற்றியும், ஜனதிபதியை சந்தித்த கூட்டணி தலைவர்கள், தாமதமின்றி தமிழினத்திற்கு உண்மையை வெளியிடவேண்டும்.

திருவாளர்கள் ரி. மகேந்திரராசா, ரகுநாதன் மற்றும் பலர் பேசினர்கள். (க)

# நோர்வேக்கு ஏற்றுமதி

(பண்டத்தரிப்பு)
பண்டத்தரிப்பு பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் யாழ். மாவட்டத்தில் மரத்தினல் தயாரிக்கப்பட்ட 'ஆஷ்றேக்களை (சிகரட் சாம்பல் போடும் பாத்திரம்) களை நோர்வே நாட்டுக்கு கடந்த மாதம் ஏற்றுமதி செய்துள்ளது.

தனியார்துறையினரால் யாழ் மாவட்டத்தில் மரத்தினல் தயாரிக்கப்பட்ட இந்த "ஆஷ்றே"க்களை பண்டத்தரிப்பு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் பெற்று அவற்றை நோர்வே நாட்டிலுள்ள பிரபல கூட்டுறவுச் சங்கம் ஒன்றிற்கு அனுப்பிவைத்துள்ளது. இதன்மூலம் 40 ஆயிரம் ரூபா அந்நிய செலாவணி கிடைத்திருப்பதாக மேற்படி சங்க அதிகாரி ஒருவர் தெரிவித்தார். தொடர்ந்தும் அங்கு இவை ஏற்றுமதி செய்யப்படுமென்றும் அவர் தெரிவித்தார். (உ)

# பலியானேர் தொகை 689 ஆக அதிகரிப்பு

புதுடில்லி, அக். 10
மேற்கு வங்காளத்தில் வெள்ளத்துக்குப் பலியானேரின் தொகை 689 ஆக அதிகரித்துள்ளது.

இவர்களில் ஒரு பகுதியினர் வாந்தி போதி நோய்க்குப் பலியாகினர்

இங்கு வெள்ளம் வடிந்து கொண்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)




## லண்டன் பயணம்

(சங்கானை)

அல்வாய் தெற்கைச் சேர்ந்த செல்வன் தேவராசா மூன்று வருட விற்பனவுத் துறையில் பயிற்சி பெறுவதற்காக லண்டன் பயணமானார்.

ஹாட்லிக் கல்லூரி பழைய மாணவரான இவர், அல்வாய் காலஞ்சென்ற இளைப்பாறிய ஆசிரியர் கதிரவேலு டானியல் சின்னத்தம்பி தம்பதிகளின் மூன்றாவது மகனாவார். (இ)

## சிங்காரவேலன் யாழ். வருகிறார்

(யாழ்ப்பாணம்)

ஈழத்துச் சிதம்பர மார்கழி உற்சவ காலத்தில் காரைநகர் மணிவாசகர் சபையால் நடாத்தப்பட்டு வருகின்ற மணிவாசகர் விழாவை இவ்வாண்டு வெகு சிறப்பாக நடாத்துவதென சபையின் நிர்வாகக்குழு தீர்மானித்துள்ளது. இருபத்து நான்காவது ஆண்டாக நடைபெறவுள்ள இவ்விழாவினை ஆரம்பித்து வைத்து சொற்பொழிவாற்ற தமிழகப் பேராசிரியர் செஞ்சொற்கொண்டல் டாக்டர் சொ. சிங்காரவேலன் வருகை தரவுள்ளார்.

வெஸ்லி (சாவகச்சேரி) தினசரி 6-30, 9-30 ஜெய்சங்கர்-ஜெய்சித்ரா பணக்காரப்பெண்

Rio (Jaffna) Phone: 7607 Daily 4 Shows 7 GOLDEN WOMEN (Adults only)

நாகம்ஸ் (சுன்னாகம்) தினசரி 2-45, 6-45, 10-00 ரகுநாதன் - சந்திரகலா தெய்வம்தந்தவீடு

ராணி (யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள் 147-வது தினமாக சிவாஜி-மஞ்சுளா நடித்த உத்தமன் (ஈஸ்ட்மன் கலர்)

மனோகரா (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள் என்.டி.ராமராவ்-அஞ்சலிதேவி நடித்த பட்டி விக்கிரமாதித்தன்

வின்ஸர் (யாழ்ப்பாணம்) போன்: 466 தினசரி 4 காட்சிகள் ஜெமினி - தேவிகா நடித்த வாழ்க்கைப்படகு [புதிய பிரதி]

வெலிங்டன் (யாழ். நகர்) தினசரி 3 காட்சிகள் சனி, ஞாயிறு 4 காட்சிகள் ஆலயமணி (புதியபிரதி)

லிடோ (யாழ். நகர்) போன்: 7698 தினசரி 4 காட்சிகள் தேன்சிந்துதே வானம்

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள் சிவாஜி ... சாவித்திரி ... பாலையா சந்திரபாபு ... தங்கவேலு நடித்த காத்தவராயன் (புத்தம்புதியபிரதி)

REGAL (Jaffna) Phone: 360 Daily 4-30, 7-00, & 9-30 P. m. Richard Harris in 20th Century Fox Present BLOOMFIELD (colour)

சாந்தி (யாழ்ப்பாணம்) போன்: 7642. கடைசிதினம் 12-10-78 தினசரி 10-15, 2-15, 6-15, & 10-00 எம்.ஜி.ஆர் - ஜெயலலிதா அரசகட்டளை [புத்தம்புதிய பிரதி]

ராஜா (யாழ். நகர்) தினசரி: 10-30, 2-30, 6-30, 9-45 ஃ மரிக்கார் ராமதாஸ் ஃ ஹெலன்குமாரி செல்வசேகரன்-சிவராம் - ஜவாகர்-ராஜகோபால் மற்றும்பலர் நடித்த சிறந்த ஹாஸ்ய திரைவிருந்து! ஏமாளிகள்

# "சாக்கடையில்தள்ளி என் முதுகில்கல்லைப்போட்டனர்"

## சன்சோனிக்கமிஷன்முன் விவசாயி சாட்சியம்

(திருகோணமலை)

"ஓடும் பஸ்ஸில் இருந்து என்னைத் தூக்கி வீச முயன்ற காடையர்கள், பஸ் நிறுத்தப்பட்டதும் அருகே இருந்த சாக்கடையில் என்னைத் தள்ளி மோசமாகத் தாக்கினார்கள். இத்தாக்குதலின்போது எனது பற்கள் உடைந்தன. பின்னர் எனது முதுகின்மீது பெரியதோர் கல்லைத் தூக்கிப்போட்டனர்."

இவ்வாறு திருகோணமலையில் நடைபெற்றுவரும் சன்சோனிக்கமிஷன் விசாரணையில் கந்தளாய் பேராறு கொலனியைச் சேர்ந்த செல்லத்தம்பி முருகுப்பிள்ளை (45 வயது) என்பவர் சாட்சியமளிக்கையில் கூறினார்.

### வெளியே தூக்கி வீசு

விவசாயியான இவர் தமது சாட்சியத்தில் மேலும் கூறியதாவது:-

"கந்தளாயில் உள்ள எனது மகன் வீட்டிற்குப் பஸ்ஸில் சென்றுகொண்டிருக்கையில் ஒருவர் தீப்பெட்டி இருக்கிறதா என என்னிடம் கேட்டார், நான் தீப்பெட்டியை எடுத்துக் கொடுக்கையில், மற்றொரு நபர் என்னைத் தாக்கினார். அத்துடன் என்னை வெளியே தூக்கி வீசுமாறும் கூறினார். நாலைந்து பேர் என்னைத் தூக்கி வெளியே வீச முயன்றபோது நான் வாசல் ஓரத்திலிருந்த கம்பியை இறுகப்பற்றிக்கொண்டேன். நான் கம்பியை இறுகப்பற்றிப் பிடித்ததும் பஸ் நிறுத்தப்பட்டது. பின்னர் மேற்கண்டவாறு நடந்தது.

### முதுகெலும்பு முறிந்தது

பெரிய கல்லைத்தூக்கி அவர்கள் என் முதுகில் போட்டதால் என் முதுகெலும்பு ஒன்று முறிந்தது. என்னைத் தாக்கியோர் பஸ்ஸில் ஏறியதும் பஸ் புறப்பட்டது.

பஸ் சென்றதும் மிகவும் கஷ்டத்துடன் எனது மகனின் வீட்டிற்குக் காட்டு வழியாகச் சென்றேன்." என்றார். (உ)

# திருமலையில்21 தமிழர்கொலை

## கமிஷன்முன் சட்டத்தரணி தகவல்

(திருகோணமலை)

"திருகோணமலையில் வன்செயல்களின்போது 21 தமிழர்கள் கொலை செய்யப்பட்டனர். இது தொடர்பான சாட்சியங்களை ஆஜர்படுத்தவிருக்கிறேன்."

இவ்வாறு பாதிக்கப்பட்டோர் சார்புச் சட்டத்தரணியான திரு. சிவா. இராஜரத்தினம் கமிஷன்முன் தெரிவித்தார். சிங்கள பெரமுனை, சிங்கள வாலிபர் பெரமுனை ஆகியவற்றின் சட்டத்தரணிகள் விசாரணையை நீடிக்க வேண்டுமென வேண்டுகோள் விடுத்தனர்.

"19 சாட்சிகளை நாம் ஆஜர்படுத்தவிருக்கிறோம். இக்கலவரத்திற்கான அடிப்படைக் காரணங்களையும் விளக்கவிருக்கிறோம் என இச்சட்டத்தரணிகள் தம் வேண்டுகோளில் காரணம் காட்டினர்.

விசாரணை இம்மாதம் 28ம் திகதிவரை நடைபெறுமென்றும் இதற்குமேல் நீடிக்கப்படமாட்டாதென்றும் கமிஷனர் திரு. சன்சோனி தெரிவித்தார். (உ)

## ஆதிபராசக்தி...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

பராசக்திதேவியின் புனித இரவுகள் மிகவும் சிறப்பாக கொண்டாடப்பெற்று எல்லோரும் வீரபுருஷர்களாகவும், செல்வக் கல்விச்சீமான்களாகவும் இந்த உலகில் வாழ வழிகோலும் வகையில் நவ இரவு வழிபாடு அர்த்தம் நிறைந்தவகையில் கொண்டாடப்படவேண்டியது அவசியமானதாகும்.

## கலைவாணி ச. ச. நிலையத்தில்

(யாழ்ப்பாணம்)

கலைவாணி சனசமூக நிலையத்தில் இன்றிரவு வாணிவிழா நடைபெறவிருக்கிறது. வண்ணை தெய்வத்தின் 'மஞ்ஞதி மன்னன்' நாடக ஆரம்ப விழாவும் நடைபெறும்.

கவிஞர் வே. ஐயாத்துரை, கலைஞர்களுக்கு ஆசிகூறி பிரதிஷ்டை வழங்குவார். (ஈ)

## கலைமகள் விழா

(யாப்பாணம்)

வட்டுக்கோட்டை கலா நிலைய கலைமகள் விழா இன்று மாலை நிலைய மண்டபத்தில் நடைபெறுகிறது.

மாணவிகளின் கலைநிகழ்ச்சிகளை அடுத்து இசை அரங்கில் சங்கீத பூஷணம் சு. கணபதிபிள்ளை இன்னிசை விருந்தளிப்பார். (இ)

## கைதடியில் விஜயதசமி

(யாழ்ப்பாணம்)

கைதடி இலங்கை சைவ அனாதை இல்லத்தில் இன்று மாலை விஜயதசமி விழாக் கொண்டாடப்படுகின்றது.

இசைமணி வே. நடேசன் சங்கீதபூஷணம் எஸ் விஜிசித்தம்பி திருமதி பூமணி இராஜரத்தினம் ஆகியோரும் பங்கு பெறுவர்.

திருமுறை வகுப்புகளும் ஆரம்பித்து வைக்கப்படும். (உ)

## எழுவைதீவில் கலியுக . . .

[3-ம் பக்கத்தொடர்ச்சி]

### "பார்த்ததுபோதும் எழும்புங்கள்"

இதற்கிடையில் அந்தக் கோவிலின் பொறுப்பாளர்களில் ஒருவர் இளைஞர் எங்களிற் சிலரை மூலஸ்தானத்துக்கருகே, கம்பி இடைவெளியினூடாக நுழைந்து வந்து பார்க்குமாறு கேட்டுக் கொண்டார். பகுதிபகுதியாக மக்களை உள்ளே விடுவதுதான் அவருடைய திட்டம். அதிர்ஷ்டம் எனக்கு முதலில் அடித்துவிட்டதே என்ற இறுமாப்புடன் இரு கைகளிலும் எனது பிள்ளைகள் இருவரையும் இழுத்துக்கொண்டு முன்னேசென்று அமர்ந்தேன். ஐந்து நிமிடங்கள்... வேல் வேலாகவே நின்றது. வேலைச்சுற்றி எனது கற்பனைசக்தியைப் பிரயோகித்துப் பார்த்தேன். ஊஹூம் பத்து நிமிடங்கள்... ஒன்றுமே தெரியவில்லை. அதற்கிடையில் எம்மை உள்ளே விட்ட அந்த இளைஞர், "சரி, சரி பார்த்தது போதும்; எழும்புங்கள் இன்னும் எத்தனையோ பேர் பார்க்கவிருக்கிறார்கள்" என்று துரிதப்படுத்தினார். மற்றவர்கள் எழும்பினார்கள். நானும் அரை மனதுடன் எழுந்தேன். பிள்ளைகள், "அப்பா" முருகனைப் பார்த்து விட்டீங்களே?" என்று கேட்க நான் சலிப்புடன் "இல்லை, இல்லை. வாங்கோ, போவம்" என்று சொல்ல, அந்த இளைஞர் இதைக் கவனித்துவிட்டு, "என்ன? உங்களுக்கு ஒன்றும் தெரியவில்லையா?" என்றார். "இல்லை" என்றேன். "பரவாயில்லை. இப்போது தெரியாவிட்டாலும், சிறிது நேரம் செல்லப் பார்க்கலாம். இந்தச் சந்தடியும் கொஞ்சம் குறையட்டும்" என்றார் அவர். "சரி"யென்று தலையை அசைத்துவிட்டு, வேண்டா வெறுப்புடன் வெளியே வந்து நின்றுகொண்டேன்.

### ஏமாற்றத்தில் வேதனையடைந்தேன்

இந்த நேரத்தில், அங்கு நின்றுகொண்டிருந்த பலரது முகங்களிலும் ஏமாற்றமும், அவநம்பிக்கையும் பிரதிபலிப்பதைக் காணக்கூடியதாக இருந்தது. எழுவைதீவு என்னை ஏமாற்றியதைவிட என்னுடைய முருகன் இப்படி என்னை ஏமாற்றி விட்டானே என்று என் உள்ளம் நொந்தது. வீட்டைவிட்டுப் புறப்படுகையிலும் நான் மனைவியிடம் கூறியிருந்தேன். "ஒவ்வொரு வருடமும் செல்வச்சந்நிதிக்குத் தவறாது ஒரு நாளாவது— தேர் அல்லது தீர்த்தம்— செல்லும் எனக்கு இவ்வருடம் போக முடியாமல் முருகன் செய்துவிட்டான். ஒருவேளை எழுவைதீவில் அவன் தனது இனிய காட்சியை எனக்காகக் காட்டுவதற்குத்தான் போலும்" என்று.

சிறிதுநேரம் சிந்தனையில் ஆழ்ந்து 'எல்லாம் வியாபாரம் எல்லாம் ஏமாற்று; எல்லாம் வேஷம் வெறும் வேஷம்' என்று ஒருபுறம் மனம் சலிக்க, 'வந்ததுதான் வந்துவிட்டேன், வேலை வடிவாகப்பார்த்து முருகனுடைய உண்மையை இறுதியாக அறிந்து கொள்வோமே என்று மறுபுறம் உள்ளுணர்வு இழுக்க மீண்டும் வெளியே நின்றவர்களுடன் சேர்ந்து நின்று வேலைப்பார்த்தேன். ஒரு நிமிடம் இரண்டு நிமிடம். இது வேலாகத்தான் நிற்கப் போகிறதோ என்று இம்முறையும் மனம் சபலிக்கும் அதே நேரத்தில்... [மிகுதி நாளை]

## தீண்டாமை ஒழிய.........

(நெல்லியடி)

தீண்டாமைக் கொடுமையை சாடவும், ஒழுக்கக்கேடுகளை ஒழிக்கவும் நாடகத்துறை மூலம் நடவடிக்கை எடுக்க நெல்லியடி-கரவெட்டி சமதர்ம மன்றம் முன்வந்துள்ளது. அகில இலங்கை ரீதியாக நாடகப்போட்டிகளை நடாத்த தாம் நடவடிக்கை மேற்கொண்டுவருவதாக மன்ற நிர்வாகியான திரு ரி. மகாலிங்கம் தெரிவித்தார். (உ)

# "தமிழ்ஈழக் கோரிக்கையை கூட்டணி கைவிடாது"

## பண்டிதர் இரத்தினம் உறுதி

(வேலணை)

"தமிழ் ஈழக் கோரிக்கையைக் கைவிட்டு எந்த அரசாங்கத்துடனும் சேர்ந்து தமிழர் விடுதலைக் கூட்டணி எந்தச் சூழ்நிலையிலும் இயங்காது இந்த அரசாங்கத்தின் சூழ்ச்சி வலையிலும் சிக்காது "கண்களை விற்றுச் சுழிவுச் சித்தரத்தை வாங்காது" என்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் நிருவாகச் செயலாளரும் காவலூர் எம். பி. யுமான பண்டிதர் கா. பொ. இரத்தினம் நயினாதீவில் நடைபெற்ற கருத்தரங்கொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் கூறினார். அவர் மேலும் கூறியதாவது:

"தமிழ் மொழிப் பிரச்னை இன்னமும் தீர்க்கப்படவில்லை. தமிழ் உத்தியோகத்தர்கள் சிங்களத்தேர்ச்சி பெறவேண்டும் என்னும்அடிமைமுத்திரை அகற்றப்படவில்லை. தமிழ்ப் பகுதிகளில் பணியாற்றும் தமிழ் தெரியாத சிங்களவர்களால் தமிழ்ப்பகுதிகளினைத் தமிழில் திருவாகம் செய்ய முடியுமா? சென்ற பன்னிரண்டு ஆண்டுகளாகத் தமிழ் மொழிச் சட்டங்கள் ஏட்டுச் சுரைக்காயாகத்தான் இருந்துவருகின்றன. இப்பொழுதும், இனியும் ஏட்டுச்சுரைக்காயாக — உயிரற்ற சட்டங்களாகத்தான் அவை இருக்கும். இந்தத் தமிழ்ச் சட்டங்களை நடைமுறைப்படுத்தும் முழு அதிகாரமும் தமிழ் மக்கள் கைக்கு வராமல் ஒரு நாளும் இந்தச் சட்டங்களை நடைமுறைப்படுத்த முடியாது தீராத பிரச்னைகளையெல்லாம் தீர்த்துவிட்டோம் என்று இந்த அரசாங்கம் தமிழ்மக்களை ஏமாற்றுகின்றது.

"கல்விகற்கும் மொழி முன்னர் தாய்மொழி என்றிருந்தது. அமைச்சர் தேவநாயகத்தின் அரசாங்கம் அதனைத் தேசியமொழியிலொன்று என அரசமைப்பில் வரைந்துள்ளது! இதனால் சிங்களப் பகுதிகளில் வாழும் தமிழ்மக்களைச் சிங்களத்தில் கல்வி கற்பிப்பதற்கு வழிவகுக்கப்பட்டுள்ளது.

நாங்கள் முன்கேட்ட பிரதேச சபைகள், மாவட்ட சபைகள் யாவும் இன்றைய மாவட்ட அமைச்சர்கள் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன என்று அண்மையில் அமைச்சர் தேவநாயகம்பத்திரிகைகளுக்கு ஓர் அறிக்கை விட்டார். நாங்கள் கேட்ட சபைகளை நியமிக்கும் அதிகாரம் எங்கள் மக்களுக்குத்தான் உண்டு. மாவட்ட அமைச்சர்களை நியமிக்கும் அதிகாரம் ஜனாதிபதி திரு. ஜே. ஆர், ஜயவர்த்தனவுக்கு உரியது என்ற இந்த அடிப்படை வித்தியாசத்தை அவர் உணராமல் பேசுகின்றார்.

"சத்தியப்பிரமாணம் ஒரு சம்பிரதாயம், உலகம் முழுவதும் இச்சம்பிரதாயத்தை மீறித்தான் அரசியல் அமைப்பைத் திருத்தியும் மாற்றியும் புதிதாகவும் அரசியல் அமைப்பை ஆக்குகின்றார்கள், பெரும்பான்மை இனத்தவர்கள் மாற்றினால், புதியதை ஆக்கினால் முறையானது, சிறுபான்மை இனத்தவர் அவ்வாறு செய்தால் அது பிழையானதா? இவ்வாறு திரு. இரத்தினம் கூறினார்.

---

"இளைஞர்களே அச்சம் வேண்டாம்;

# வாக்குறுதிகளை நிறைவேற்ற

## முடியாவிடின் பதவிதுறப்போம்!"

### யாழ். எம்.பி. அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

"இளைஞர்கள் சிலர் நாம் பதவிக்காகத்தமிழ்மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை மீறிவிடுவோமோ என்றுதற்போது அச்சம் கொண்டுள்ளனர். வாக்குறுதிகளை நாம் நிறைவேற்றமுடியாவிட்டால் பதவியைத் துறந்து விடுசெல்வோம்."

இவ்வாறு யாழ்ப்பாணம் எம். பி. திரு. வி. யோகேஸ்வரன் திருநெல்வேலி கலாமன்ற சனசமூக நிலையத்தினரால் நடாத்தப்பட்ட கலைவாணி விழாவில் பேசுகையில் தெரிவித்தார்.

விழாவிற்கு வடமாநில கல்வித் திணைக்கள நிர்வாக அதிகாரி திரு. ஆ. மகாலிங்கம் தலைமை வகித்தார்.

திரு. யோகேஸ்வரன் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

"தார்மீகம் பேசுகின்ற ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவின் அரசு கிழக்கு மாகாணத்தமிழர்களும் வடமாகாணத் தமிழர்களுக்குமிடையே சிண்டு முடிந்து தமிழ்மக்களின் ஒற்றுமையைக் குலைத்து அவர்களை அழித்து விட பகற்கனவுகாண்கின்றது. இதற்குத் தமிழ்மக்கள் ஒருபோதும் இரையாகமாட்டார்கள்."

இப்பொழுது தமிழ்இளைஞர்கள் சிலர் நாம் பதவிக்காகத் தமிழ் மக்களுக்குக்கொடுத்த வாக்குறுதிகளை மீறிவிடுவோமோவென்று அச்சம் கொண்டுள்ளனர். நாம் மக்களுக்குக்கொடுத்த வாக்குறுதிகளிலிருந்து எள்ளளவும் விலகமாட்டோம். வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாவிட்டால் பதவியைத்துறந்து விடுசெல்வோம். வாணிக்கு விழா எடுக்கின்ற இப்புனித தினத்திலே நாம இளைஞர்களைக் கேட்டுக் கொள்வதெல்லாம் தலைவர்கள் மீது நம்பிக்கை வையுங்கள் என்பதுதான்" என்றார்.

விழாவில் இலங்கைப் பல்கலைக்கழக யாழ். வளாகத் தமிழ்விரிவுரையாளர் திருமதி யோகேஸ்வரி கணேசலிங்கமும் உரைநிகழ்த்தினார். திரு. பொன். சுந்தரலிங்கத்தின் இசைக்கச்சேரியும் நடைபெற்றது. (உ)

---

## பஸ்ஸில் நடந்தது

[யாழ்ப்பாணம்]

கோப்பாய்-யாழ் பஸ்ஸில் வயோதிப பிரயாணி ஒருவருக்குச் சேரவேண்டிய மிகுதிப் பணத்தை நடத்துநரிடமிருந்து ஏமாற்றிப் பெற்றுக்கொண்ட பெல்பொட்டம் வாலிபர் ஒருவர் சகபிரயாணிகளால் அடையாளம் காணப்பட்டு கண்டனத்துக்குள்ளாகி தமது பஸ் பிரயாணத்தை இடையிலேயே முடித்துக்கொண்டாராம்.

நேற்றுமுன் தினம் கோப்பாயிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த பஸ்ஸில் இருபாலைச் சந்தியில் ஏறிய வயோதிபப் பிரயாணி ஒருவர் 5 ரூபாவைக் கொடுத்து 50 சதத்துக்கு டிக்கட்டைப் பெற்றுக்கொண்டாராம்.

சிறிது நேரத்தில் நடத்துநர் 5 ரூபா தந்தது யார் எனக் கேட்டபோது பஸ்ஸிலிருந்த பெல்பொட்டம் வாலிபர் ஒருவர் தாமே ஐந்து ரூபா கொடுத்ததாகக் கூறி மிகுதியைப் பெற்றுக்கொண்டார்.

அப்பணத்திற்குரிய பிரயாணி நடத்துநரிடம் தமது மிகுதிப் பணத்தைக் கேட்டபோதே குட்டு வெளிப்பட்டதாம். (இ)

---

## ஆலயம் சகலருக்கும் திறக்கப்பட்டது

[நெல்லியடி]

கரணவாய் முதலைக்குழி முருகையன் கோயில் பாரபட்சமின்றி சகலருக்கும் திறந்து விடப்பட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை பருத்தித்துறை நீதவான் திரு கே. ஞானச்சந்திரன் முன்னிலையில் இவ்வைபவம் நடைபெற்றது

இவ்வாலயம் முன்பு சிறுபான்மைத் தமிழர்க்கு திறந்து விடப்பட்டு மீண்டும் தடை செய்யப்பட்டது அதனால் விவகாரம் நீதிமன்றம்வரை சென்றது நீதிமன்ற தீர்ப்பினை அடுத்து இவ்வாலயம் சிறுபான்மைத் தமிழருக்கு இவ்வாலயத்தினுள் செல்ல அனுமதி கிடைத்தது

---

சட்டவிரோதமாக

# சாராயம் விற்றார் ரூ.1000 அபராதம்!

(யாழ்ப்பாணம்)

சட்டவிரோதமாக சாராயம் விற்ற குற்றத்திற்காக எதிரிக்கு யாழ். மாவட்ட நீதிபதி திரு. டபிள்யு. ஜி. எம். வீரத்ன ஆயிரம் ரூபாய் அபராதம் அல்லது ஆறுவார சிறைத்தண்டனை விதித்தார்.

யாழ்ப்பாணம் ஐந்தாம் குறுக்குத்தெருவைச் சேர்ந்த சின்னப்பு துரைசிங்கம் என்பவர்மீதே மேற்படி குற்றம் சாட்டி வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

யாழ் பொலிஸ் நிலைய குற்றத் தடுப்பதிகாரி திரு. எஸ். திருச்சிற்றம்பலத்தினால் தொடரப்பட்ட வழக்கு நேற்றையதினம் விசாரணைக்கு எடுக்கப்பட்டு தீர்ப்பு வழங்கப்பட்டது. எதிரி குற்றத்தை ஒப்புக்கொண்டார். அபராதத் தொகையைச் செலுத்துவதற்கு நீதிபதி அடுத்தமாதம் 2ந் திகதிவரை அவகாசம் அளித்துள்ளார். (கெ)

---

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 1978-ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 11-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu Post Box No: 49, Telegram Eelanaadu, Telephone: 389 - Registered as a Newspaper in SriLanka.

---

## வாணி விழா

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் பல்தொழில் நுட்ப நிறுவன இந்து மாணவர் மன்றத்தின் வாணிவிழா இன்று காலை நடைபெறுகின்றது. விழாவையொட்டி, சங்கீதக்கச்சேரி, வில்லுப்பாட்டு, கவியரங்கம், வழக்குரை மன்றம் ஆகியன நடைபெறும்.

0 0 0

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி வாணிவிழா, இன்று காலை நடைபெறுகிறது. விழாவில் பல கலைநிகழ்ச்சிகளும் இடம்பெறும். [கெ]

---

## யாருடையது?

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஜனதா ஹோட்டலுக்கு அண்மையில் ஜனாப் எம். முகமது இக்பாலால் கண்டெடுக்கப்பட்ட மூன்று பெரிய திறப்புகள் அடங்கிய திறப்புக்கோர்வை 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் தகுந்த ஆதாரம் காட்டிப் பெற்றுக்கொள்ளலாம். (ஆ-ர்)

---

மாணவிகள்மீது

## வாலிபர்களின் சேஷ்டை!

### பொலிஸ் அதிபரின் உதவி நாடப்படுகிறது

(யாழ்ப்பாணம்)

சமீபநாட்களாக கொழும்புத்துறை, கண்டிக்குளி. அரியாலை ஆகிய சந்திகளில் பாடசாலை செல்லும் மாணவிகள் மீது வாலிபர்களின் சேஷ்டை அதிகரித்துவருவதாக பெற்றோர் கவலைதெரிவித்துள்ளனர்.

யாழ். நகரின் பிரபல கல்லூரிகளின்முன்பாக காலையும் மாலையும் முன்னர் பொலிஸார் மேற்கொண்ட ரோந்து மற்றும் கண்காணிப்புச்சேவை தற்போது நிறுத்தப்பட்டுள்ளதை வாலிபர்கள் சாதகமாகப் பயன்படுத்தி, மாணவிகள்மீது சேஷ்டைகள் புரிந்து கேலிசெய்கின்றனராம்.

இதுகுறித்து சில பெற்றோர் யாழ். பொலிஸ் அதிபருடன் தொடர்புகொண்டு மீண்டும் கல்லூரிகள் ஆரம்பமாகும் போதும், விடுகின்றபோதும் பொலிசாரை ரோந்துநடவடிக்கைகளில் ஈடுபடுத்துமாறு வற்புறுத்தவுள்ளனர். (கெ)

---

## அமைதிப் பேச்சு நாளை ஆரம்பம்

வாஷிங்டன், அக். 10

காம்ப்டேவிட் மகாநாட்டு தீர்மானத்தின் அடிப்படையில் மத்திய கிழக்கு அமைதிக்கான எகிப்து - இஸ்ரேல் பேச்சு வார்த்தைகள் வியாழக்கிழமை அமெரிக்க வெள்ளை மாளிகையில் ஆரம்பமாகும்.

அமெரிக்க ஜனாதிபதி திரு. ஜிம்மி கார்ட்டர் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்துவைப்பார்.

இஸ்ரேல், எகிப்து வெளிநாட்டமைச்சர்களுடன் அமெரிக்க வெளிநாட்டமைச்சரும் இப்பேச்சு வார்த்தைகளில் கலந்துகொள்வார் என்று தெரிவிக்கப்பட்டது. பேச்சுவார்த்தைகள் 3 வாரம் நடைபெறும். (இ)

---

## குடிநீர் கஷ்டம்

[சரவணை]

சரவணை-ஊர்காவற்றுறைப் பகுதிகளில் குடிநீரின்றி மக்கள் கஷ்டப்படுகின்றனர் வரட்சியின் காரணமாகக் கிணறுகளில் தண்ணீர் இல்லாமையே இதற்குக் காரணமாகும் [உ]

---

## இன...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

காரங்களை தன்வசத்திலும் கொண்டிருக்கும் ஜனாதிபதி, இன ஐக்கியத்துக்கு அழைப்பு விடுகின்றார் என்றால் அது உண்மையானஒரு அழைப்பே' என்று தெரிவித்த அமைச்சர், ஐக்கியம் தலைவர்கள் மத்தியில் மட்டும் வந்தால் போதாது; மக்கள் மத்தியிலும் அடிப்படை உணர்வில் ஏற்பட வேண்டும்" என்றும் கேட்டுக் கொண்டார்.

சிலாபம் பங்கதெனியாவில், பால்சபையின், பால்சேகரிப்பு நிலையமொன்றை திறந்து வைத்த அமைச்சர், மாறவிலாவில் கோழிப்பண்ணையையும் பார்வையிட்டார். (ம)

---

## இன்று...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

களின் தங்கச்சங்கிலியையும் நடுத்தர மாது ஒருவர் அணிந்திருந்த சங்கிலியையும், பலரிடமிருந்து பணப் பேர்சுகளையும் அபகரித்துச் சென்றுள்ளதாக பொலிஸில் புகார்செய்யப்பட்டுள்ளது. பொலிஸார் சந்தேகத்தின்பேரில் மூவரை பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச்சென்று விசாரணை நடத்தினர்.

## தீர்த்தோற்சவம் இன்று

இன்று காலை வெங்கடேச வரதராஜப்பெருமானுக்கு தீர்த்தோற்சவம் நடைபெறும். காலை 9-00 மணிக்கு வசந்த மண்டபப்பூசை நடைபெறும். மாலை மானம்பூ உற்சவம் நடைபெறும். (கெ)

---

## நன்றி நவிலல்

4—10—78 புதன்கிழமை நடைபெற்ற

**திரு. எஸ். பி. இராஜகோபாலன் (நிதிநிர்வாகி)**

ஹறிமோல்ட் அன் கொம்பனி லிமிட்டெட் (இங்கிலாந்து) அவர்களின் இறுதிச்சடங்குகளில் நேரில் கலந்துகொண்டும், மலர்வளையங்கள் மற்றும் அனுதாபச் செய்திகள் அனுப்பியும் எமது துன்பத்தில் பங்கு கொண்ட அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம், தனித்தனி நன்றி தெரிவிக்க முடியாமைக்கு வருந்துகிறோம்!

திருமதி சுந்தரேஸ்வரி இராஜகோபாலன்.

திரு-திருமதி ஜெகநாதன், 97, கோவில் வீதி, யாழ்ப்பாணம்,

திரு-திருமதி பெரியதம்பி, அதிகூடி லேன், கந்தர்மடம்.

0541